[illegible]

V 5 No. 13. 31 March. 1932

JL
ഗ211, N28Kਮ
N32.5.13
88961

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 0 3

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஷ மார்ச்சு மீ 31உ [No. 13

5 - APR 1932

## பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 241
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 243
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 247
4. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 3. 4.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 249
5. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (முகவுரை).
கி. வெங்கடசாமி ரெட்டியார் 251
6. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 252
7. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 254
8. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்)
T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 256
9. இளமையும் முதுமையும்
M. சோமசுந்தரம்பிள்ளை B.A.L.T., 257
10. மதிப்புரை—சந்திரமதி 259
11. வர்த்தமானம் 259


## கலாநிலயம்

### வித்தகமோ விதிவசமோ. 5.

**வி**த்தகத்திற்கும் பகுத்தறிவிற்கும் உள்ளவேற்றுமையை ஒருவாறு விளக்கினேம். பகுத்தறிவின் எல்லைக்கு மப்பால் வித்தகந்தான் எடுத்தடிவைத்து ஏம்பலொடு செல்கின்ற உண்மையும் செப்பலாயிற்று. ஆதலின், "அறிவின்பாற்பட்டது இது" என்பதும் "வித்தகத்தின்பாற்பட்டது இது" என்பதும் ஒரே பொருளைக் குறிக்கின்ற இரண்டு வாசகங்களாகாமை வெளிப்படை. வேறுவேறு விதங்களில் இவையிரண்டும் விவகரிக்கின்றன. பகுத்தறிவிற்கு உகந்தாயிருத்தலாலேயே ஒன்று வித்தகமாகவும் இருத்தல்வேண்டும் என்னும் நியதியில்லை. உத்தம வித்தகமுடையதாயிருக்கும் ஒரு விடயம், விட்டுத்தருவதின்றியாவற்றையுந்திட்டப்படுத்துகின்ற பகுத்தறிவினுல் கடியப்படுவதற்குரியதாவதுமியலும்.

பாண்டவரில் மூத்தோன் இச்சமயம் நம் நினைவிற்கு வருகின்றான். அடிமைபட ஆடியது பொய்ச்சூதேனும் அதனிலுந்தா னளித்தவாக்கை, மெய்ம்மை அலமர அவலமாக்கப்படாதென்று நிடதர்தம் நிருபனேபோல் உறுதிபூண்டொழுகினன் தருமராசன். அரவநெடுங்கொடித் துரியோதனன் ஐவருக்குமுரியாளை மன்னவையில் இளிவரும்படி துகிலுருந்து இழிவுபல செய்ததுமன்றியும், தான் முன்னுரைத்த மொழிப்படியே கானகத்தில் கடவநாள் கழித்துத் தீர்ந்த பாண்டவர்க்குக் குருநாடுமரசுங் கொடுக்க மறுத்துவிட்டனன். தம்பியருந் திரௌபதியும், மா மாயன் சூழ்ந்து தூண்ட, வெம்போர் விளைத்தற்கே வெகுண்டு வேண்டினர். தம்மை நிந்தித்து வஞ்சனை புரிந்த ஒருவனைத் தண்டித்துத் தமக்குரிய குருநாட்டைப் பெறுவதே நீதியென நெடிது கூறினர். இவையனைத்தும் பகுத்தறிவின் வகைவந்த வாசகங்கள். தருமன், இவைகளைக் கேட்டனன். பகுத்தறிவினளவிலே நின்றவனவனுமாயின், இதன் நீதியையும் அந்நீதியை நிலைநிறுத்தவல்ல தன் தம்பியர் ஆற்றலையும் மனத்திற்கொண்டு அன்னதற்கு உடன்பட்டிருப்பான். வீமனும் விசயனும் வஞ்சின முடிக்குமாறு வெம்போர் வேண்டிய நெறிதான் அநீதியன்று. ஆயினும் வித்தகச்சித்தமுடைய தருமபுத்திரன், பகுத்தறிவுபுகுத்திய நீதிக்கிணங்க இசைந்திலன். நீதியினும் பெரியதன்றே தீங்கிழைத்தோர்மாட்டும் நீங்குதலில்லாத அன்பு. இவ்வித்தகத்தின் வழியதாய அன்புதான் பகுத்தறிவிற்கு முற்றிலும் மாறுகி, தனக்கிருக்கின்ற உரிமைகளை மறப்பதுமன்றிப் பிறருக்கு இல்லாத உரிமைகளை இனிதளித் துவந்துநிற்கும். ஆதலின், பகுத்தறிவின் படிவங்களாய்த் தன்முன் ஆரவாரஞ் செய்திருந்த இளையோரை நோக்கி, "உரிமையுடன் தம்பியர் அன்று உணர்வறியாமையின் அவைக்கண் உரைத்தமாற்றம் பரிபவமோ" என்று தருமன் துரியோதனதியர்க்குப் பரிந்துபேசினன். "அண்ணன்மார் என்ற உரிமையாலும் கொழுந்திஎன்றஉறவினுலும் அன்னுன் இழைத்தவைகளுக்கு நீங்கள் இத்துணைப்பரிபவ மடைவானேன்" என்ற வியப்பினில் தருமனது வித்தகம் வெளிப்பட்டது. இதனைக் கேட்ட பகுத்தறிவு என் செய்தது—எளிமையே யிதுவென இளிவா இகழ்ந்தது. "ஊணமிலான் மானமிலா துரைப்பதற் கென்செய்வது—இவனுடன் பிறப்பதே நான்,' என்று வீமசேனன் விட்டுரைத்தனன். துரோபதியைத் துகிலுரிய, "மாண்டார்போல் அது கண்டு மன்னவையில் யாமிருந்த மாச

தீரவேண்டாவோ" என இகழ்ந்தனன் விசயன். நகுலனும், "கோத்தருமந்தனில் ஆண்மை கூறுதோ, கூறுக நீ கொற்றவேந்தே" எனப் பரிகசிக்கலாயினான்.

ஆயினும் என்! தருமனே நல்லவன். பகுத்தறிவினின்று முளைப்பதாகிய நீதி அவன் வித்தக நெஞ்சத்தில் வேரூன்றவில்லை. வித்தகத்தினின்று பிறப்பது நன்மை. நன்மையுடையவனை நல்லன் என அழைக்கின்றோம். நன்மையோ நீதியைக்கடந்து நெடுந்தூரம் பரவவல்லது. நீதியைக்கடப்பதெல்லாம் அநீதி ஆகாது. பகுத்தறிவின் முடிவிற்கும் உடன்பாடின்றி நடைபெறுகின்றவைகளே 'அநீதி' என்று உரைப்பதற்குரியனவாம். மற்று, பகுத்தறிவிற்கேற்றதாகிய முடிவினைக்கடந்துயர்வதோ வீரம் என விளங்கிப் போற்றப்பெறும். உயரிய உண்மைகள் முழுமையாய் உட்கொள்ளற்குரியனவேயன்றி உதாரணங்களால் அவைகளை முற்றிலும் விளக்குவதென்பது இயலாமையே அவைகளின் இன்றியமையா இயற்கையாம். எனினும், நீதியல்லாததொன்று ஒருபுறம் அநீதியெனத் தாழ்வதும் மறுபுறம் வீரம் என உயர்வதும் நேர்வதற்கு உதாரணம் ஒன்று நாடி உரைசெய்வதாயின், தொழிலாளர் முதலாளி என்னும் இவ்விருதிறத்தார்க்கிடை நிகழும் உறவினை ஒருவாறு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். வேலைக்கேற்ற கூலியை வற்புறுத்துவது நீதியே. அதிகவேலை பெற்றுக் குறைந்த கூலி கொடுக்கின்ற ஒருவனை அவன் பகுத்தறிவேயும் பாராட்டாது. "நீ செல்வமும் செல்வாக்கு முடையவனாயிருக்கின்றாயாதலின், வேறேதுங்கதியற்று உன் தொழிலில் அமர்ந்த ஒருவனை இவ்வண்ணம் நடத்தலாமோ" எனப் பகுத்தறிவு சினந்து கேட்கும். "உன்னுடைய வேலையாட்களை நீ நேராக நடத்தினாற்றான் உன் காரியமும் நடைபெறும், ஆக்கமும் உண்டாம்" என்று எடுத்துக் காட்டுவது நீதியுமன்று, பகுத்தறிவின் பேச்சுமன்று. இதுபோன்றுரைக்கின்ற பொருளாதார நூல்களும், 'தலைவர்களின்' பேச்சுக்களும் குள்ளநரியை கும்பிட்டுக் கற்றறிந்த உபாயங்கள். உண்மையாய பகுத்தறிவின் வாசகம் வேறுவிதமா யிருக்கும். "அலகிலா இந்நிகிலத்தில் நீ எத்தனை, நீ யீட்டும் பொருளெத்தனை! நின்னனைய இன்னொருவனை உன்னுடைய ஆக்கத்தின்பொருட்டு அடியுடன்பிழிந்துகொள்ளற்க. நீ யீட்டிய பொருள்களை உன் புலன்களுக் கூட்டிவருகின்றாயே; அதனால் துன்பமொழிய, உன்னுடைய அளவின்படியேனும் இன்பந்தான் என்றேனும் எய்தினாயோ! நீ கற்றனவும் கேட்டனவுங் கருத்திற் கொண்டு நின் புலன்களைப் புறங்கண்டு நீதியைச் செலுத்துவாய்" என்று இன்ன பல எடுத்துரைத்து இணக்குவது பகுத்தறிவின் பாரம். இத்துணை தூரந்தானும் எட்டிநிமிர்வது எளியதன்று. இதனிற்கு எட்டாமல் சோர்ந்த செய்கை அநீதி. இனித் தொழிலாளன் தன்மையைக் காண்போம். தான் செய்யும் வேலைக்கு ஏற்ற கூலியை அவன் எதிர்பார்ப்பது நீதியே. "உண்மையாகப் பாடுபடுகின்றாய். உன்னால் உன் எசமானனுக்குப் பொருள் திரள்கின்றது. அதனில் உனக்குரிய சிறிய பாகத்தை நீ பெறாயாயின் மேலினி அவன்தொழில் புரியநீ எங்ஙனம் ஆற்றுவாய். பகுத்தறிவின்றி அவன் தன் நீதியைச் செலுத்தாமற் போயினானெனில் வற்புறுத்தி அதனை வாங்கிக்கொள்ளல் நீதியே" எனத் தொழிலாளன் தன் பகுத்தறிவினால் போதிக்கப் பெறுகின்றான். இதனினும் மற்று, பொறுமையாலும், வஞ்சனைவைத்து வேலைசெய்துபறிக்கக்கூடியவரையில் ஆதாயமென்னும் புன்மையாலும் புரள்கின்ற கயமையைப் பகுத்தறிவின் தூண்டலென்று மயங்கலாகாது. இது அநீதியாம். இவ்வநீதிகிடக்க, ஏற்றகூலி கேட்பது நீதியேயா யிருக்கின்ற நிலையிலும் ஒரு தொழிலாளன், "அலகிலா இந்நிகிலத்திடையே, யான் எத்துணை, யான் பெறுங்கூலி எத்துணை; இதனில் காசிரண்டு கூடினாலென், குறைந்தாலென்! ஐயோ பாவம், கொடுப்பதற்கு மனமின்றித் தவிக்கின்றான் முதலாளி. அல்லது கொடுக்கமாட்டா இடையூறு யாதுளதோ அவனுக்கு, யாரறிவார்? கேட்டால் வருந்துகின்றானவன். கிடைக்கின்ற கூலி போதாமல் வருந்துகின்றேன் யான், உண்மையே. அவன் கொடாமையால் எனக்குத் துன்பமுளது; கொடுப்பதென்னின் அவனுக்குத் துன்பம்; இவ்வாறு இதனில் ஒருவருக்குத் துன்பம் விளைவது திண்ணமாதலின், அது எனக்குத்தான் ஆகட்டுமே. இன்னார் நீதி இன்னதென்று நுனித்துரைக்கவும் நிலைநிறுத்தவும் யாவனை ஒரு நான்! எனக்கிட்ட தொழில்இது. பிறர் இன்புறும் வண்ணம் என்கடமை இதனையான் ஆற்றுவேன்" என அமைவானாயின் அத்தொழிலாளி அங்ஙனே ஒரு வீரனாகின்றான். இது வித்தகத்திற் பூத்தமலர். பகுத்தறிவின் பண்புடைய நீதியைக்கடந்தது; ஆயினும் அநீதி என்னற்கமையாதது. எனின், பகுத்தறிவின் முடிவு வரையில் எட்டாமை அநீதியென்றும், எட்டியபின் அம்முடிவிற்கும் மேலாதல் வீரமென்றும், வகைசெய்து இவ்வேற்றுமையை உணரலாம். ஆதலின், நீதிக்கிணங்காமல் நிகழவல்லது வீரமாக, அநீதிதான் ஒருபோதும் வீரம் ஆகாமை வெளிப்படை.

வித்தகத்தினின்று இத்தகையவீரம் பிறக்கின்றதென்றோம். இப்பிறப்பு இயற்கையாவது எங்ஙனமென்பதையும் ஒருவாறு ஊகிக்க இயலும். என்காலம் என் இடம் என் வர்த்தமானம், என்ற சிறுசிறு வளையங்களுட் சுழலாமல், காலதேச வர்த்தமானங்களின் அப்பாலுக் கப்பாலாயவோர் அலகிலாமையின் உணர்வினை நம் வாழ்க்கையுள் ஓவாது உடன்படுத்தி வைத்திருக்குந் தன்மையே வித்தகம் போலும். கவி இரவீந்திரநாதர் உரைக்குமாப்போல்-நித்தியத்திலே நிலைத்த வாழ்க்கையன் மனிதன், என்ற மெய்யுணர்வும் அவ்வுணர்விற்கேற்றசெய்கையும் நிகழ்ந்து விளங்குவது வித்தகத்தின் இலக்கணம், என்றக்கால் சிறியன சிந்தியாமல் நீதியினும் நீண்டுசெல்லும் வீரம் சுரப்பதே இன்றியமையா இயற்கையாகின்றது. இங்கு இது இன்று யான், என்னும் அலகுகளைக்கடந்த உணர்வு பகுத்தறிவிற்கும் இல்லாமற்போகவில்லை. வித்தகர்களைப்போலவே முதிர்ந்த பகுத்தறிவுடையோரும் இதனை ஒருவாறு உணர்வார். ஆயினும், வித்தகர்களாயினோர்க்கும் பகுத்தறிவாளர்களுக்கும் உள்ளவேற்றுமை என்னையோவெனின், பகுத்தறிவாளர் உணர்ந்த அவ்வுண்மையை ஒவ்வுவதோடுமட்டும் நின்றுவிடுவார்; அதன்மேற் செல்லும் துணிவு அவர்களுக்கில்லை. இவ்வுணர்வினையே பற்றுக்கோடாக வைத்து நம் வாழ்க்கையனைத்தையும் செலுத்துதல் வேண்டுமென்று செப்பினாலோ, "இவ்வுலகத்தில் அது எவ்வகையில் இயல்வதாகும்" என்று பகுத்தறிவு மறுத்துவிடும். "ஐய, நின் வேதாந்தங்களும் சித்தாந்தங்களும், தத்துவமசியாதி மகாவாக்கியங்களும் [illegible]ம், அதற்கும் இவ்வுலகில் [illegible]கும் என்ன சம்

பந்தம்," என முனிந்தவராய், பகுத்தறிவாளர், அவ்வுணர்வினை நம்முடைய வாழ்க்கைக்கு முக்கியமாகக் கருதமாட்டார்— (பகுத்தறிவு மில்லாத முழுமூடர் எண்ணிறந்தோரும் இப்படிப்பேசுவதைக்கேட்கலாம்; அவர்சொல்லை ஒன்றாகமதித்து நாமிதனைச் செப்பவில்லை. வித்தகநன்னிலை கைவராக்கால் பகுத்தறிவிற்கும் முழுமூடத்திற்கும் சிற் சிலபோது இப்படி வேற்றுமை பற்றுக்கிடப்பதைக் கருத்திற்கொண்டாற்போதும்)— வித்தகமோ, எவ்வளவிற் கெவ்வளவு அந் நிரந்தரப் பெருமையைக்கொண்டு நம் செய்கைகளை இயக்குகின்றதோ அவ்வளவிற் கவ்வளவு உத்தமமாகின்றது.

இங்கு முன்னுரைத்தவைகளினின்று உய்த்துணர்தற்கொன்று தெளிவுபெற்றெழுதல் வேண்டும். பகுத்தறிவினுள் மெய்யான அன்பிற்கு இடமில்லை; வித்தகத்திலோ அன்புதான் அதிகம் உளது. வித்தகத்தின் மேலாய மெய்ம்மையும் அன்பின் மேலாய தூய்மையும் இணைந்துடன் வளர்ந்துபடர்கின்றன. அன்றுஇன்று அங்கு இங்கு அது இது என்பன அனைய வரம்புகளற்றவொரு முழுமையின் உருவமே அன்பு எனப்படும். இது சிவத்தின் உருவமாதலால், சிந்திக்குமளவில் தித்திக்கும்படி சீவன்களுக்கும் இவ்வுருவே நனி அமையும் என்னலாம். சிவத்தின் பகுத்தறிவு சீவனின் பகுத்தறிவை வென்றுநின்ற விந்தையே வித்தகமாய் விளங்குகின்றதென விளம்பினோற்று ஞகாதோ !

---

# தமிழ்ப் பாடம் 13.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[225-வது பக்கத் தொடர்ச்சி]

கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்க
ளுற்ற தறியா வுளநடுங்கிப்—பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

பதப்பிரிவு:—கொற்றவன்தன் தேவிக்கு கோமகள்தன்தோழியர்கள் உற்றது அறியா உளம் நடுங்கிபொன் தொடிக்கு வேறுபாடு உண்டு என்றார் வேந்தனுக்கு மற்று அதனை கூறினாள் பெற்ற கொடி.

பதவுரை.

கோமகள்தன் - அரசகுமாரியினுடைய
தோழியர்கள் - தோழிமார்கள்
உற்றது - நிகழ்ந்தது
அறியா - அறியாமல்
உளம் - மனம்
நடுங்கி - நடுங்கி,
கொற்றவன்தன் - அரசனுடைய
தேவிக்கு-மனைவிக்கு,[களை யணிந்த தமயந்திக்கு
"பொன்தொடிக்கு - பொன்னாற்செய்த வளையல்
வேறுபாடு - (ஏதோ) மாறுபாடு
உண்டு - உண்டாயிருக்கின்றது"
என்றார் - என்று கூறினர்.
மற்று - பிறகு
பெற்ற - தமயந்தியைப் பெற்ற
கொடி - கொடிபோன்ற தாயும்
வேந்தனுக்கு - அரசனுக்கு
அதனை - அந்தச் செய்தியை
கூறினாள் - சொன்னாள்.

கருத்து:—தமயந்தியின் நிலையைக்கண்ட தோழியர் பெரிதும் பயமெய்தி அவள் தாயினிடம் சென்று, "தமயந்திக்கு ஏதோ வேறுபாடு உண்டாயிருக்கின்றது" என்று கூறினார்கள். அவளும் வந்து பார்த்துவிட்டுத் தன் நாயகனிடம்சென்று செப்பினாள்.

விரிவுரை:—அன்னத்தினுடன் தமயந்தி தனியிடம் சேர்ந்துவிட்டாளாதலால் தோழியர்களுக்கு அங்கு நடந்த செய்தியொன்றுந் தெரியாது. எனவே மீண்டும் சந்தித்தபோது காதலால் உள்ளழிந்து முகம் வெளுத்துப் போன தமயந்தியின் வேறுபாட்டைக் கண்ட தோழியர், இதற்குக் காரணம் காதல்நோய் என்பது உணராமல் நடுநடுங்கி அரசிக்குப்போய்ச் சொல்லினர். உற்றது அறியா உளம் நடுங்கி, என்ற வாக்கியத்தில் அறியா என்பது வினையெச்சம். இந்த உருவம் உடைய வினையெச்சத்திற்கு உடன்பாடு positive), எதிர்மறை (negative) இரண்டு பொருள்களும் உண்டு. [இதனை விரிவாக, 64-வது பக்கத்திலுள்ள குறிப்பிலும், 188-வது பக்கத்திலுள்ள குறிப்பிலும் காண்க]. ஆதலால் இங்கு அறிந்து நடுங்கினார்கள் என்றுங்கொள்ளலாம்; அறியாமல் நடுங்கினார்கள், என்றுங் கொள்ளலாம். ஆனால் முன்னும் பின்னும் கருது நோக்கின் அறியாமல் நடுங்கினதாகக் கொள்வதுதான் சிறந்தது.

தமயந்தியினது அன்னையின் பெயர் சாருவாசனி. அவள் தமயந்தியை வந்து பார்த்துப் பிறகு அரசனிடம் அவளது நிலையைச் சொன்னாள். நோயின் குறிகளென்னவென்று கேட்டிருப்பானவன்; 'முகம் விளர்த்து மெய்பதற வாய்க்குவந்ததைப் பிதற்றி வெறித்த பார்வையளாய்க் கிடக்கின்றாள் நம் மகள்; யாது செய்வோம்' என்று அரசியும் கூறியிருப்பது இயற்கையே. யாவும் கேட்ட அரசன், அனுபவ முதிர்ந்தவனாதலால், இது காதல்நோயாகத்தான் இருத்தல்வேண்டும் என்று ஊகித்திருப்பான். ஏனெனில், அடுத்த செய்யுளில் இவன் தன் மனைவிட்டுக் கன்னிமாடத்திற்குப் புறப்படுகின்ற பவனிவைபவத்தைப் பார்த்தால் நோயுற்ற மகளைக்காண விரைந்துசெல்கின்ற ஒரு தந்தையின் செய்தியாய்த் தோன்றவில்லை.

---

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்
மருங்குலவ வார்முரச மார்ப்ப—நெருங்கு [கால்
புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாண் மனை. 42.

பதப்பிரிவு:—கரும் குழலார் செம் கையினால் வெண் கவரி பை கால் மருங்கு உலவ வார் முரசம் ஆர்ப்ப நெருங்கு புரிவளை நின்று ஏங்க போய் புக்கான் பெற்ற வரி வளை கை நல்லாள் மனை.

அன்வயம்:—கரும்குழலார் செம்கையினால் (வீசும்) வெண்கவரிப் பைங்கால் மருங்கு உலவ, வார் முரசம் ஆர்ப்ப, நெருங்கு புரிவளை நின்று ஏங்க, போய் (தான்) பெற்ற வரிவளைக்கை நல்லாள் மனை (வீமராஜன்) புக்கான்.

பதவுரை.

கரும் - கரிய

குழலார் - கூந்தலையுடைய மாதர் (தம்)
செம் - சிவந்த
கையினால் - கைகளால் (வீசும்)
வெண் - வெண்மையாகிய
கவரி - சாமரையினது
பை - பசுமையாகிய
கால் - காற்று
மருங்கு - பக்கத்திலே
உலவ - உலவவும்,
வார் - வார்கட்டிய
முரசம் - பேரிகைகள்
ஆர்ப்ப - சப்திக்கவும்,
நெருங்கு - அடர்ந்த
புரி - முறுக்கு வாய்ந்த
வளை - சங்கவாத்தியங்கள்
நின்று - இடைவிடாமல்
ஏங்க - ஒலிக்கவும்,
போய் - புறப்பட்டு,
பெற்ற - (தான்) பெற்ற
வரி - கோடுகளமைந்த
வளை - வளையல்களை யணிந்த
கை - கைகளையுடைய
நல்லாள் - பெண்ணாகிய தமயந்தியின்
மனை - மனையினுள்
புக்கான் - புகுந்தான்.

**விளக்கம்:**—புக்கான்-புகுந்தான் (பயனிலை). [யார் புகுந்தான்? வீமராஜன், (தோன்றா எழுவாய்)] எங்குப் புக்கான்? மனை. யார்மனை புக்கான்? நல்லாள் மனை. எப்படிப்பட்ட நல்லாள் அவள்? கை நல்லாள்-கைகளையுடைய பெண். எதையணிந்த கைகளையுடைய நல்லாள்? வளைக் கை நல்லாள் - வளையல்களை அணிந்த கைகளையுடைய பெண். எப்படிப்பட்ட வளையல்களை யணிந்த கைகளையுடைய பெண்? வரி வளை - கோடுகள் அமைந்த வளையல்கள். அந்த வரி வளைக் கை நல்லாள் யார்? பெற்ற நல்லாள் - அவன் பெற்ற பெண். என்னசெய்து நல்லாள் மனை புக்கான்? போய்ப் புக்கான். எப்படிப் போனான்? உலவப் போய்ப் புக்கான். எங்கு உலவ? மருங்கு உலவ - பக்கத்திலே உலவ. எது மருங்கு உலவ? கால் - காற்று. எப்படிப்பட்ட காற்று? பைங்கால் - பசுமையான காற்று - இளமையான காற்று - மெல்லிய காற்று எதனுடைய பைங்கால் மருங்குலவ? கவரிப் பைங்கால் - சாமரையினது இளங்காற்று. எப்படிப்பட்ட சாமரை? வெண் கவரி - வெண்சாமரை. [எந்த வெண்கவரி? வீசுகின்ற வெண் கவரி] எதனால் வீசுகின்ற வெண்கவரி? கையினால். எப்படிப்பட்ட கையினால்? செம் கையினால் - சிவந்த கைகளால். யார் சிவந்த கையினால் வீசும் வெண்மையான கவரியிலிருந்து வருகின்ற மெல்லிய காற்று? குழலார் - கூந்தலையுடைய மாதர். எப்படிப்பட்ட குழலார்? கரும்·குழலார் - கரிய கூந்தலையுடையவர். இன்னும் எப்படிப்போனான்? ஆர்ப்பப் போய்ப் புக்கான் - சப்திக்கவும் போய்ச்சேர்ந்தான். எது ஆர்ப்ப? முரசம் ஆர்ப்ப - முரசவாத்தியங்கள் சப்திக்க. எப்படிப்பட்ட முரசம் ஆர்ப்ப? - வார் முரசம் ஆர்ப்ப - வார்களால் இறுக்கிய முரசவாத்தியங்கள் சப்திக்க. இன்னும் எப்படிப் போய்ப்புக்கான்? ஏங்கப் போய்ப்புக்கான் - ஒலிக்கவும் போய்ச்சேர்ந்தான். எப்படி ஏங்க? நின்று ஏங்க - இடைவிடாமல் ஒலிக்க. எது நின்று ஏங்க? வளை - சங்குகள். எப்படிப்பட்ட வளைகள்? புரிவளை-முறுக்குக்களை யுடைய சங்கங்கள். எப்படிப்பட்ட முறுக்குக்களையுடைய சங்கு? நெருங்கு புரி வளை - அடர்ந்தமுறுக்கியமுறுக்குக்களையுடைய சங்கங்கள்.

குறிப்பு:—1. முதலடியில் பல நிறங்களைத் தொடுத்துப்பாடிய அழகுஇங்குக் கவனிக்கத்தக்கது. இதனில் கருமை செம்மை வெண்மை பசுமை, என்ற வெவ்வேறு நிறங்களை ஒன்றாய்ப் பொருத்தி அமைத்திருக்கின்றார் கவி. யாப்பு இலக்கணத்தில் இப்படி வருகின்ற அடிக்கு முற்றுமுரண் தொடை என்று பெயர். யாப்பு இலக்கணம் செய்யுளில் சீர் அடி முதலியவைகள் அமைகின்றதைப்பற்றிச் சொல்வது. அதற்கு ஆங்கிலத்தில் Prosody என்று பெயர். யாப்பிலக்கணத்தைப்பற்றி இதுவரையில் ஒன்றும் சொல்லவில்லை. இதற்குள் சொல்லப் போவதுமில்லை. எனினும், அணிகளைப்பற்றிச்சில சொல்லியிருக்கின்றேன். முன் அணியென்றால் என்னவென்று (23-வது பக்கத்தில்) சொல்லியிருப்பதையும், உவமையணி, ஒழித்துக்காட்டணி (24-வது பக்கம்) உயர்வு நவிற்சியணி (44-வது பக்கம்), உருவகவணி (84-வது, 143-வது பக்கங்கள்) தற்குறிப் பேற்றவணி (145-வது பக்கம்) இவைகளின் இலக்கணங்களையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இந்தச் செய்யுளில், கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால் மருங்குலவ, என்வருவது விரோதவணி. சொல் அளவிலேயாகட்டும் அர்த்தத்தினாலாகட்டும் ஒன்றற்கொன்று விரோதமா யிருப்பவைகளைச் சேர்த்து, சொல்லவருகின்ற ஒரு கருத்திற்குப் பொருந்தும்படி இணைப்பது விரோத அணியின் இலக்கணம். இங்குக் கருமை சிவப்பு வெண்மை பசுமை ஆகிய இந் நான்குநிறங்களும் சொல்லளவில் ஒன்றற்கொன்று விரோதமானவை. விரோதம் என்றதற்கு இங்கே பகை என்பது பொருளன்று. ஒன்றற்கொன்று மாறுபட்டன. இப்படி மாறுபட்ட நிறங்களைக் குறிக்கும் சொற்களை எல்லாம் சேர்த்து, வீசிய காற்றிலே கொண்டுபோய்ப் பொருத்தமாக முடித்திருத்தலால் இது முரண்கொண்ட பல சொற்களை ஒக்க முடித்த விரோதவணி.

விரோத அணிக்கு, வார்த்தைமாத்திரம் முரணாக வந்துவிட்டால் போதாது. "தெருவிலே, வெள்ளைக் குதிரையும் சிவப்பு மாடும் கருப்பு நாயும் போயின", என்றதில் ஒரு அணியுமில்லை. இந்த நிறங்களெல்லாம் பொதுவான எந்த விஷயத்தையுஞ் சார்ந்துமுடியும்படி வரவில்லை. அதுபோன்றின்றி இந்தச்செய்யுளில் வந்திருக்கின்ற அணியைப் பாருங்கள். கருமையான கூந்தலை யுடையவர் சிவப்பான கைகளால் வெண்மையான சாமரையைக் கொண்டு வீசும் பசுமையான காற்று, என்று காற்று உலவியதென்ற ஓரே கருத்திற்குத் தக்கபடி நிறங்களைத் தக்க இடத்தில் கொடுத்து முற்றும் பொருத்தமாய் முடித்தார். இனி, விரோதவணி யென்றால் சொல்லளவு மாத்திரந்தான் மாறானவைகளைப் பொருத்திவைத்தல் என்றாவது, அதுவும் நிறங்களின் வேறுபாடுகளாகவே இருக்கவேண்டுமென்றாவது எண்ணிக்கொள்ள வேண்டா. எந்தச் சொல்லாயினும் எந்தக் கருத்தாயினும் எதிராயிருப்பவைகளைப் பொருந்தும்படி கூறினால் அது விரோத அணியாகும். சாதாரண உதாரணங்கள் ஒன்றிரண்டு காட்டுவோம்.

"சூரியன் மறையவும் சந்திரன்தோன்றவும் மாலைக் காலம் வந்தது":—சூரியன் சந்திரன், மறைதல் தோன்றல், இவைகள் ஒன்றற்கொன்று எதிரானவை. ஆனால் சூரியன் சந்திரன், என்பன சொல்லளவில் மாத்திரம் எதிர்ப்பதங்களே யொழியப் பொருளில் முரண்பட்டனவல்ல. ஆனால் மறைதல் தோன்றல், என்பன சொல்லளவின்மாத்திரம் அல்லாது பொருளாலும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவை. ஆதலால், சூரியன் சந்திரன், என்பன சொல்விரோதம்; மறைய தோன்ற என்பன பொருள் விரோதம். இவைகளை எல்லாம் ஒன்றுப்சேர்த்து மாலைகாலச் செய்தியாகப் பொருத்தி முடித்தது விரோத அணி.

"பாபங்கள் அழியவும் புண்ணியங்கள் வளரவும் இராமன் பிறந்தான்," என்பதும் அப்படியே விரோத அணி ஆகும்.

பொருளாலும் சொல்லாலும் ஆக்கி ஒரே கருத்திற்கு இணங்கும்படி பொருத்திமுடித்த விரோத அணிக்குக் கீழ்வருஞ்செய்யுளை நினைவில் வைத்துக்கொள்வது நலமாகும்:—

காலையு மாலையுங் கைகூப்பிக் காறெழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாங்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்
பெருமானைச் சிற்றம் பலத்து. [தார்ப்

அழகிய கருமையான யானைத்தோலையும் வெண்மையான விபூதியையும் சிவந்த சரீரத்தையும் பசுமையான மாலையையும் உடைய சிவபிரானைச் சிதம்பரத்தில் தரிசித்துக் காலையிலும் மாலையிலும் நாம் கை கூப்பி அவரது காலைத் தொழுதால் மேலான கர்மங்களெல்லாம் கீழாகப் போய்விடும், என்பது இச்செய்யுளின் பொருள். இதனில் வந்திருக்கின்ற முரண்களெல்லாம் ஒரே கருத்திற் பொருந்துகின்ற அழகை மறக்கக் கூடாது.

2. நின்று ஏங்க:—இங்கே நின்று என்பதற்கு இடைவிடாமல் என்பது அர்த்தம். செய்யுள்களிலே இந்தப் பதத்திற்கு இந்தப்பொருள் சாதாரணம்.

3. உலவ, ஆர்ப்ப, ஏங்க என்னும் வினையெச்சங்கள் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்திருக்கின்றன.

---

கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள்—மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றாற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன். 43.

வந்த தன் தந்தையின் கால்களைப்பணிந்து தமயந்தி எழுந்தாள் என்பதை இச்செய்யுள் கூறுகின்றது.

---

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தந் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். 44.

அவ்வாறு தொழுதெழுந்து, வியர்வை வழிந்தநெற்றியினளாய்த் தன்முன் நின்ற பேதைமகளைப் பார்த்து வீமராஜன், 'இவளுக்குச் சுயம்வரம் வைக்கவேண்டும் என்று எண்ணினன். கோயின்குறிகளைத் தன் மனைவி சொல்லக் கேட்டபோதே, இவளுற்றது காதல்நோயாகத்தான் இருக்கவேண்டுமென்று அவன் ஊகித்தபடியே அவளைப் பார்த்ததும் நிச்சயமாகி உடனே சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்னும் தீர்மானங்கொண்டான்.

யாரோ ஒருவன்மீது இவளுக்குக் காதல் உண்டாயிருக்கின்றது என்பது மாத்திரம் நிச்சயம். ஆயினும், அது யார் என்று அவளைக் கேட்டாலோ நாணத்தால் வாயைத் திறக்கமாட்டாளென்பது அவனுக்குத் தெரியும். ஆதலால், சுயம்வரம் வைத்து எல்லா அரசர்களையும் வரவழைத்தால் அவர்களுள் ஒருவனும் அவளது காதலன் வாராமலிரான்; பின் அவனைத் தன் மகள் தேர்ந்துகொள்ளட்டும் என்பது விதர்ப்பமன்னன் கருதிய சூழ்ச்சி.

---

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினன்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. 45.

பதப்பிரிவு:—மங்கை சுயம் வரம் நாள் ஏழு என்று வார் முரசம் எங்கும் அறைக என்று இயம்பினன் பை கமுகின் கூந்தல்மேல் கங்கை கொழுந்து ஓடும் நல் நாடன் வேந்தர்மேல் தூது ஓட விட்டு.

அன்வயம்:—கங்கைக் கொழுந்து பைங் கமுகின் கூந்தன்மேல் ஓடும் நல்நாடன், வேந்தர்மேல் தூது ஓட விட்டு, "மங்கை சுயம்வரம் நாள் ஏழு என்று, எங்கும் வார் முரசம் அறைக" என்று இயம்பினன்.

பதவுரை.

கங்கை - கங்காநதியின்
கொழுந்து - அலைகள்,
பை - பசுமையான
கமுகின் - பாக்குமரத்தின்
கூந்தல்மேல் - பாளைகளின்மேல்
ஓடும் - பாய்கின்ற
நல் - வளப்பம் பொருந்திய
நாடன் - விதர்ப்பநாடுடையவனாகிய வீமராஜன்,
வேந்தர்மேல் - அரசர்கள்பால்
தூது - தூதர்களை
ஓடவிட்டு - விரைந்து அனுப்பி,
"மங்கை - தமயந்தியினது
சுயம்வரம் - சுயம்வரத்திற்கு
நாள் - நாட்கள்
ஏழு - ஏழு (இருக்கின்றன)"
என்று - என்று
வார் - வார்கட்டிய
முரசம் - முரசங்களை
எங்கும் - எல்லாத் தேசங்களிலும்
அறைக - அடியுங்கள்'
என்று - என்று
இயம்பினன் - விளம்பினன்.

விரிவுரை:—"பைங்கமுகின் கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும்" என்பது விதர்ப்பநாட்டின் நீர்வளத்தைக் காட்டுகின்றது. பாக்குமரம் மிக உயரம். வெள்ளம் புரண்டுவரும் கங்கையாற்றின் அலைகள் பாக்கின் பாளையை எட்டியதென்றால் நீரின் மிகுதி தெரிகின்றது. ஆற்றினின்று அலை எழுவதைக் கொழுந்து விடுவதெனவருணித்திருப்பது அழகியகவிவருணனை. இவ்வாறே கம்பர் சித்திரகூட மலையை வருணிப்பவராய், அதனின்று அகிற்புகை அந்தணர் ஆகுதிப்புகையோடும் கலந்தெழுகின்ற தோற்றத்தைக் "கரிய மால்வரைக் கொழுந்தெனப் படர்வன காணாய்" என்று காட்டுகின்றார்.

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் [வண்டிரைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தாற்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். 46.

பதப்பிரிவு:—மா முத்தம் வெண் குடையான் மால் களிற்றான் வண்டு இரைக்கும் தாமத்து அரி சந்திரன் சுவர்க்கி நாமத்தால் பா வேய்ந்த செம்தமிழாம் என்ன பரந்ததே கோ வேந்தர் செல்வம் குழாம்.

கருத்து:—தமயந்திக்குச் சுயம்வரம் என்ற செய்தி மிக விரைவில் அரசர்களுக்கிடையே சென்று பரவிக் கிளர்ச்சி யுண்டாக்கியது.

பதவுரை.

மா - பெரிய
முத்தம் - முத்துக் குஞ்சகள் கட்டிய
வெண் - வெண்மையான
குடையான் - குடையை உடையவனும்,
மால் - மதங்கொண்ட
களிற்றான் - யானைகளையுடையவனும்,
வண்டு - வண்டுகள்
இரைக்கும் - (மொய்த்து) ஒலிக்கும்
தாமத்து - மாலையை அணிந்த
அரி - சிங்கத்தைப் போன்றவனும் (ஆகிய)
சந்திரன்சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்பவனுடைய
நாமத்தால் - பேரினால்
பா - பாட்டுக்களை
வேய்ந்த - புனைந்த
செம் - செம்மையாகிய
தமிழாம் என்ன - தமிழைப்போல,
(தமயந்திக்குச் சுயம்வரம் என்னும் செய்தி),
கோ - சிறந்த
வேந்தர் - அரசர்களது
செல்வம் - திருவமைந்த
குழாம் - கூட்டங்களுக்கிடையே,
பரந்தது - எங்கும் பரவியது.

விளக்கம்:—பரந்தது - பரவியது (பயனிலை). [எது பரவியது? சுயம்வரச் செய்தி, தோன்றா யெழுவாய். முன் பாட்டையும் பின் பாட்டையும் கூறிய உவமையையும் கருதி, இந்த எழுவாயை வருவித்துக்கொள்ள வேண்டும்] எங்கே பரந்தது ? குழாம் - கூட்டத்திற்கிடையே. எந்தக் கூட்டத்திற்கிடையே பரந்தது ? செல்வக் குழாம்-திருவமைந்த கூட்டத்திற்கிடையே. யாருடைய செல்வக் குழாம்? வேந்தர் செல்வக்குழாம் - அரசர்களது திவ்விய கூட்டங்களில். எப்படிப்பட்ட வேந்தர் ? கோவேந்தர் - சிறந்த வேந்தர்.

சிறந்த வேந்தர்களது செல்வம் அமைந்த கூட்டங்களுக்கிடையே தமயந்தியின் சுயம்வர வதந்தி எதைப் போல் பரவியது ? தமிழ் ஆம் என்னப் பரந்தது - தமிழ் எப்படிப் பரவுமோ அப்படிப் பரவியது. என்ன தமிழ்? செம்தமிழ். என்ன செந்தமிழ்? வேய்ந்த செந்தமிழ் - புனைந்த செம்தமிழ். எது வேய்ந்த செந்தமிழ்? பா வேய்ந்த செந்தமிழ் - பாட்டுக்கள் கட்டிய செந்தமிழ். எதனால் பாட்டுக்கள் கட்டிய செந்தமிழ்? நாமத்தால் - பேரினால். யாருடைய பேரினால்? சந்திரன் சுவர்க்கி என்னும் வள்ளலினுடைய பேரினால்.

சந்திரன்சுவர்க்கி எதைப் போன்றவன் ? அரிச் சந்திரன்சுவர்க்கி - சிங்கத்தைப் போன்ற சந்திரன்சுவர்க்கி. எதை உடைய சிங்கத்தைப் போன்றவன் ? தாமத்து அரி-மாலையை அணிந்த சிங்கம். எப்படிப்பட்ட தாமம் ? இரைக்கும் தாமம் - ஒலிக்கின்ற மாலை. எது இரைக்கும் தாமம் ? வண்டு இரைக்கும் தாமம் - வண்டுகள் ஒலிக்கும் மாலை. அந்தச் சந்திரன்சுவர்க்கி எதை உடையவன் ? களிற்றான் - யானைகளை யுடையவன். எப்படிப்பட்ட யானைகளை உடையவன் ? மால் களிற்றான் - மதமயக்கங் கொண்ட யானைகளையுடையவன். இன்னும் எதை உடையவன் ? குடையான். எப்படிப் பட்ட குடையான்? வெண்குடையான். இன்னும் எப்படிப்பட்ட குடையான் ? முத்தம் வெண்குடையான்- முத்துக் குஞ்சங்கள் தொங்குகின்ற வெண்மையான குடையை உடையவன். எப்படிப்பட்ட முத்து ? மா முத்தம் - பெரிய முத்தங்கள்.

விரிவுரை:—குழாம் பரந்தது, என்று முடிப்பது பொருந்தாது. விதர்ப்பநாட்டிற்குத் தலைநகரமாகிய குண்டிணிபுரத்திற்கு அரசர்களது கூட்டம் வந்துசேரப்போகின்றது. ஆதலால், இந்நகரிலிருந்து எங்கும்பரவி அவர்களுக்குச் சந்தோஷத்தை யளித்த தமயந்தியின் சுயம்வரச்செய்தியே பரந்தது, என்று கொள்வதுதான் தகும். இந்தச்செய்தி பரவிய விரைவையும் அதனைக் கேட்டவர்கள் அடைந்த கிளர்ச்சியையும் கவி ஒரு சிறந்தஉவமையின்நலத்தினலெடுத்துக்காட்டுகின்றார். தமிழ் என்ற பதத்திற்கு இனிமை என்று அர்த்தம். கோமகளொருத்திக்குச் சுயம்வரம் என்ற செய்தி கேட்குமளவிலே இனிமையைத் தருமாதலால் அச்செய்தியைத் தமிழ்ப்பாஷைக்கு நிகராகக் கூறினர். அதுவும் தமயந்தி என்றவளுக்குச் சுயம்வரம் என்றால் அச்செய்தி பின்னும் பெருமை யடைகின்றது. அது எப்படி இருக்கிறதென்றால், சந்திரன்சுவர்க்கியின் பேரில் சாற்றிய தமிழ்ப்பாட்டு எப்படி எங்கும் விரைவில் பரவி எல்லாராலும் இனிது வரவேற்றுக்கொள்ளப் படுகின்றதோ அப்படியே தமயந்தியின் பேரைச்சொல்லி அவளுக்குச் சுயம்வரம் என்றும் சொன்னவுடனே அது ஒரு நொடியில் உலகெங்கும் பரவி மன்னவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கியது.

இவ்வாறு சொல்வது உவம அணியின் ஒருவகை. இதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி, என்று பெயர். அது எப்படியோ அப்படியே இது, என்று திருஷ்டாந்தம் காட்டுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. திருக்குறளின் முதற் செய்யுளாகிய, "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு" என்றது இந்த அணிக்கு நல்ல உதாரணம். எல்லா எழுத்துக்களும் எப்படி அ என்பதை முதலாக உடையனவாக இருக்கின்றனவோ, அப்படியே உலகம் ஆதிபகவனை முதலாக உடையது, என்று திருஷ்டாந்தம் எடுத்து அங்குக் காட்டப்பட்டிருக்கின்றது.

குறிப்பு:—1. மா. கோ. என்பன ஓரெழுத்து ஒரு மொழிகள். இவைகள் ஒவ்வொன்றிற்கும் பல அர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுள், மா என்றதற்குப் பெரிய என்றும், கோ, என்றதற்குச் சிறந்த என்றும் பொருள் கொண்டிருக்கின்றோம்.

2. சந்திரன்சுவர்க்கி:—இவன் முரணைக்கு அரசன் என்றும், புகழேந்தியின் உபகாரியென்றும், அவனைத் தன் கதையோடு சேர்த்துச் சிறப்பித்துப் பாடுகின்றவழக்கம் இக்கவிக்கு உண்டென்றும் முன் (45-வது பக்கத்தில்) கூறியிருப்பதைப் பார்க்கவும். தமிழோ சிறந்தது, அதனிலும் சந்திரன்சுவர்க்கியின் பேரை வைத்துப்பாடிய பாடல் மிகவும்கொண்டாடப்படும் என்று அவனைப் புகழ்கின்றார்.

———

செந்தடையும்வண்டுறைதார்ச்செய்யாள்வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து. 47.

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 48.

இவ்விரு செய்யுள்களாலும், அரசர்களெல்லாரும் தமயந்தியன் சுயம்வரத்தை முன்னிட்டு விதர்ப்பநகர் வந்துசேர்ந்து தங்கிய செய்தி கூறப்பட்டிருக்கின்றது.

# குன்றுடையானும் மக்களும்

[230-வது பக்கத் தொடர்ச்சி]

சிறிதுநேரங் கழிந்தபின், வாத்தியம் முழங்க, கொம்பூத, குலவை முதலான பலவகைப்பட்ட ஒலிகள் நாற்றிசையும் கேட்க, அரசன் முன் நின்று ஏவ, தூபதீபங் காட்டி மீண்டும் வடம் பிடித்தார்கள். தேர் அசையவில்லை. சனங்கள் முக்கி முறண்டு இழுத்தார்கள். 'இழு,இழு; பிடி,பிடி' என்று கூவினவர்களுடைய தொண்டை கம்மிற்றேயன்றி, தேர் ஒரு சாணும் நகரவில்லை. பங்காளிகள் சன்னிமரம் போட்டார்கள். ஆசாரிமார்கள் தேரை ஓட்டுவதற்கு வேண்டியன செய்பவர்களைப்போல் நடித்தார்கள். கோழிப் பலியும் ஆட்டுப் பலியும் எருமைக்கடாப் பலியும் கொடுத்தார்கள். தேரின் மகுடங் குலுங்கவில்லை. மணியோசை கேட்கவில்லை.

அரசரும் மற்று முள்ளோரும் இன்னது செய்வதென்று அறியாது ஆசாரிமார்களை அழைப்பித்தார்கள். பங்காளிகளும் கூட வந்தார்கள். அப்பொழுது அரசர், 'ஆசாரிமார்களே, தேர் நகரவில்லை. காரணம் புலப்படவில்லை. இதற் கென்னசெய்வோம்?' என்றார். கம்மாளர்கள், 'சாமி, நாங்கள் என்ன சொல்வோம்?' குன்றுடையாக் கவுண்டருடைய பாட்டனார் வெண்கலத் தேர் செய்து அம்மனுக்குத் தேரோட்டினார். குன்றுடையாக் கவுண்டர் அவ்வாறு வெண்கலத் தேர் செய்தாரா? மரத்தேர் செய்து ஓட்டுவது அம்மனுக்குச் சம்மதமில்லை. இனி, நரபலி கொடுத்து அம்மனைத் திருத்தி செய்தாலன்றி, தேர் நகராது. எங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னோம். அப்புறம், தங்கள் சித்தம்' என்று பணிவுடன் அறிவித்தார்கள்.

'நரபலி' என்னும் சொற் கேட்டவுடன் அரசரும் அங்குக் கூடியிருந்த பெரியோரும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்து, 'நரபலிக்கு எங்கே போவோம்? பலிக்கு யார் உடன்படுவார்?' என்று வருந்தினார்கள். குன்றுடையான் செய்வதறியாமல் தயங்கினான். அக்கூட்டத்திற் சிலர், 'பங்காளிகளுக்குக் குழந்தைகள் பலர் இருக்கின்றார்கள்; அவர்களில் ஒரு நொண்டி,முடம் இருந்தால் பலிகொடுக்கலாமே,'' என்றனர். அது கேட்டு அரசரும் பெரியோரும், பங்காளிகளை நோக்கி, 'கவுண்டர்களே, ஒரு நொண்டி முட மிருந்தால் பலி கொடுங்கள். உங்கள் பங்காளி குன்றுடையான் எடுத்த காரியத்தை நிறைவேற்றுங்கள். அம்மனுக்கும் திருத்தியுண்டாகும்; உங்களுக்கும் புண்ணியம்' என்றார்கள். பங்காளிகள் சீறிச் சினந்து, 'நாங்கள் பலிகொடுக்கவா பிள்ளை பெற்றோம்? உங்கள் நியாயம் நன்றாயிருக்கின்றது! அரசரென்றாலும், பெரியோர் என்றாலும், அவரவர் அளவில் அவரவர் இருக்கட்டும். உங்களுக்கு நியாயந் தெரிந்தால், பேசுங்கள்; தெரியாவிட்டால் சும்மாஇருங்கள். இவ்வளவுபேசுகின்றீர்களே, உங்கள் பிள்ளையைப் பலிகொடுங்கள், பார்ப்போம்' என்று சொல்லி, முன்னேறி, ஆடிக் குதித்து, 'தேரோட்டுபவன் குன்றுடையான், பிள்ளையைப் பலிகொடுப்போர் ஊராரா? ஓட்டுபவனுக்குப் பிள்ளையிருந்தால் பலி கொடுக்கவேண்டும்; இல்லையானால் அவனே பலியாக வேண்டும்' என்று கூறி, ஒதுங்கி நின்றார்கள்.

சோழமன்னர் குன்றுடையானைத் தம் பக்கலில் அழைத்து, 'என்ன இது, குன்றுடையாக் கவுண்டா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்றே! இப்பொழுது நரபலிக்கு என் செய்வோம்?' என்றார். குன்றுடையான் ஒன்றுஞ் சொல்ல நாவெழாது மதி மயங்கி, சிறிதுநேரஞ் சிந்தித்து, 'நல்லது, நானே பலியாகிறேன்; தடையில்லை. எனக்குச் சிறிது நேரம் கொடுங்கள். நான் அரண்மனைக்குப் போய் என் மனைவியோடு சொல்லி வருகிறேன்' என்று குறையிரந்தான். பங்காளிகள் பாய்ந்து வந்து, 'குன்றுடையான் தப்பியோடப் பார்க்கிறான். அவன் திரும்பிவரும் வரையில் நாங்கள் இந்த வெய்யிலில் காத்துகொண் டிருப்போமா? முடியாது. குன்றுடையான் போவதானால், நாங்கள் அவனைத் தடுத்துப் பலி கொடுப்போம்' என்று கொக்கரித்தார்கள். அரசரும் பெரியோரும் அவர்களைக் கையமர்த்தி, 'குன்றுடையான் சொன்ன சொல் தவறான். அவனுக்காக நாங்கள் பிணைப்படுகிறோம். அவன் அரண்மனைக்குப் போய்வரட்டும்' என்றார்கள். அது கேட்டுப் பங்காளிகள், 'குன்றுடையான் திரும்பி வராவிடில், பிணைநின்ற உங்களையே பலிகொடுப்போம்' என, அவர்களும் சம்மதித்தார்கள்.

தேர் நின்ற இடத்திலேயே நிற்கின்றது. குன்றுடையானுக்கு நேர்ந்த விபத்தைக் கண்டு பலர் கண்ணீர் வடிக்கின்றனர். பெண்டிர் பலர் அழுது மூக்குச்சிந்தி முக்காடிட்டு அவ்விடத்தைவிட்டு நீங்குகின்றனர்.

இங்கே, அரண்மனையில், திருவிழா ஏழுநாளும் ஒருபொழுது உண்டு மற்றைப்பொழுது தண்ணீர்மட்டும் அருந்துதல் என்ற கோட்பாட்டினை யுடையளாய்த் தவங்கிடந்த பத்தினி தாமரைநாச்சி, வாட்டமுற்ற முகத்தோடு தள்ளாடித் தள்ளாடி நடந்துவரும் குன்றுடையானைத் தூரத்தேகண்டு, யாது தீங்கு விளைந்ததோ என்று மருண்டு, சரேலென்றெழுந்து கணவனை எதிர்கொண்டு 'என்ன செய்தி, முகம் வாடியிருக்கக் காரணமென்ன?' என்று கேட்டாள். குன்றுடையான் நடந்தவற்றையெல்லாம் விம்மிவிம்மியழுதுகொண்டே சொல்லக் கேட்டுத் தாமரை, தலைதலையாய் அடித்துக் கொண்டுபுலம்பி, 'செல்லாண்டியம்மன் திருவுளம் இப்படியிருந்ததோ? நல்லது, நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேவேண்டாம். நானிருக்கையில் நீங்கள் சாதல் கூடாது. நானே பலியாகிறேன்' என்றாள். கணவன், "தாமரை, உயிர்போய் உடம்புநிலைக்குமா? நீஇறந்தபின், எனக்கு என்ன வேலை? நானிறக்கிறேன். அது அன்றியும், நீ இங்கே இறந்து நான் இருந்தால், நான் சாவுக்குப் பயந்தேன் என்று உலகம் ஏசும்,'' என்றான்.

இவ்வாறாக இவர்கள் சிறிதுநேரம் 'நான் இறக்கிறேன், நான் இறக்கிறேன்' என்று வாதாடி, பின் இருவரும் சேர இறத்தலே கருமம் என்று துணிந்தனர்.

உடனே தாமரை, தேரின்முன் நெய்த்தீபம் ஏற்றுவதற்குப் பத்துக் குடம் பசுநெய்யையும், அதற்குத் திரியிடுவதற்கு வேண்டிய தாமரை நூலையும் ஆட்களிடம் கொடுத்தனுப்பி, தருமங்கொடுக்கப் பொற்காசுகளையும் வெள்ளிக்காசுகளையும் எடுத்து மூட்டை கட்டி, அரண்மனையைப் பூட்டிச் சாவியை மடியில் வைத்து, ஐயனை முன்னடத்தி; 'செல்லாண்டி அம்மையே, நான் உனக்கு மண்ணாற் கட்டிய சுவரைக் கல்லாற் கட்டுவித்தேன்; இருப்பாலானதை வெள்ளி

யாற் செய்வித்தேன்; கோபுரங் கட்டித் தங்கக்கலசம் செய்து வைத்தேன்; நித்தப்பூசையும் திருவிழாவும் நடத்து வித்தேன்; உன்மன மிரங்கவில்லையே,தாயே! நாங்கள் எவருக்கும் எத்தீங்கும் புரியவில்லையே. நீ இப்படி எங்களைக் கைவிடலாமோ? தாயே! ஏழை முறைகேளாயோ? ஏறிட்டுப் பாராயோ?" என்று பலவாறு புலம்பிச்சென்றாள். அவள் தாதியரும், பார்த்த சனங்களும் அழுது தொடர்ந்தார்கள்.

ஐயனும் ஐயையும் தேரை யணுகுதலும், அங்குக் கூடியிருந்த சனங்களிற்பலர் ஓவென்றிரைந்து,குன்றுடையானையும் தாமரையையும் பார்க்கச் சிறிதும் சகியாமல் வெளியேறிவிட்டனர்; அரசரும் பெரியோர்களும் பித்தர்களைப்போல உட்கார்ந்திருந்தார்கள்; பங்காளிகளோ எல்லையற்ற மகிழ்ச்சியையடைந்து, ஆணிகளைப் பிடுங்கும்படி தச்சர்களுக்கு மறைவாகச் சொன்னார்கள். ஒரு நொடியில் ஆணிகள் கழற்றப்பட்டன.

ஒரு கொப்பரையில் பத்துக்குடம் பசு நெய்யையும் ஊற்றி,தாமரை நூலை முறுக்கித் திரியாக இட்டுத் தீபம் கொளுத்தி, கணவனும் மனைவியும் சிவ சிவ என்று நெற்றியில் திருநீறணிந்து, தேரிலிருந்த செல்லாண்டியம்மனை வலம்வந்து பணிந்து, தாங்கள் கொண்டுவந்திருந்த பணத்தையெல்லாம் ஏற்போர்க்களித்து, அரசரையும் பெரியோர்களையும் கும்பிட்டுத் தேருக்கு முன்புறத்தில் முன்சக்கரங்களுக்குப் பக்கத்தில் மண்டியிட்டு, கைகளை ஏந்தி, கண்களை மூடி, 'தோரேட்டுங்கள்' என்றார்கள்.

'மீண்டும் வடம்பிடித்தார்கள். தேரசையவில்லை.சனங்கள் முக்கியிழுத்தார்கள். சக்கரங்கள் பதிந்துகொண்டமையால் தேர் சிறிதும் நகரவில்லை. தேரை யிழுக்க இழுக்க, சக்கரங்கள் ஊன்றிய குழிகள் ஆழ்ந்து, பருத்து, மண்ணிற் புதையுண்ட சக்கரங்களை நகரவொட்டாமல் தடைப்படுத்தின. சனங்கள் கைசோர்ந்து வடத்தை விடுத்தார்கள்.

சிறிதுநேரம் கழிந்தபின் வடம்பிடிக்கும்படி அரசர் ஏவுதலும், சனங்கள் முன்னிலும் மும்மடங்கு திரண்டு, முறண்டு இழுத்தார்கள். பலவகை வாத்தியங்கள் முழங்கின. தேர் 'கடக்கு முடக்கு' என முன்னும் பின்னும் சிறிது அசைந்து, சக்கரங்கள் புதைந்திருந்த குழிகளை விட்டுத் திடீரெனக் கிளம்பி, மூன்று முழ உயரந்தாண்டி, கணவனையும் மனைவியையுங் கடந்து ஒரு புறமாய்த் திரும்பி ஓடிற்று. அது சென்ற விரைவில் கம்மாளர் எல்லோரும் தேரடியில் அகப்பட்டு நசுக்குண்டு இறந்தனர்; பங்காளிகள் பன்னிருவரும் தேர்க்காலில் அகப்பட்டும், சன்னிமரங்கள் தவறித் தலையில் விழ அடிபட்டும் சேர மடிந்தனர்.

தேர் தன்னைக்கடந்து ஓடினபின், குன்றுடையான் கண்விழித்துப் பார்த்து, மனைவியை எழச்சொன்னான். கணவனும் மனைவியும் எழுந்திருந்து, திரும்பிப்பார்த்து, இறந்துகிடந்த பயங்காளிகளைக்கண்டு, அலறிவிழுந்து, கதறி அழுது, பின்சிறிதுதேறி, இரண்டு மாதிகர்களை அழைத்து, பாய்ச்சலூருக்குப் போய்ப் பங்காளிகள் வீட்டில் இழவுசொல்லும்படி கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

அங்கே, பாய்ச்சலூரில், பங்காளிகளின் மனைவியர், தம் கணவர்கள் சொற்படி மாலையில் சிற்றூலைப்பட்டணத்தை அடைதல் வேண்டுமென்று குளித்துமுழுகி, பட்டுடுத்துப் பணிபூண்டு, தாம்பூலந் தரித்து ஆளுக்கொருகூடையில்கட்டிச் சாதமெடுத்துத் தலையில்வைத்துப் புறப்பட்டு, சிரித்துப் பேசிக்கொண்டே வழிநடந்தனர். அவர்கள் பாய்ச்சலூரைக்கடந்து பத்தடிதூரம் போவதற்குமுன் ஒரு பூனை குறுக்கிட்டது. அதைக் கண்டு அவர்களில் ஒருத்தி, 'அடியே தங்கை, பெரிய வீட்டுக்காரன் இறப்பது நிச்சயம்' என்றாள். "தொலையட்டுமடி," என்றாள் மற்றொருத்தி. அவர்கள் இன்னுஞ் சிறிதுதூரம் நடந்தபொழுது, ஒரு குட்டியீன நாகன் வழிமறித்தது. அதைக்கண்டு ஒருத்தி, "அக்கா பெரியவீட்டுக்காரன் பெண்டாட்டிக்கும் ஓலைகிழிந்தது' என்றாள். மற்றொருத்தி, 'அம்மாடி, அந்தப்பெருமை,அந்த வாழ்வு! அது எத்தனைநாளைக்கு நிலைக்குமடி?'என்றாள். அவர்கள் பின்னுஞ் சிறிதுதூரம் போன பின், ஓர் எண்ணெய்க்குடம் எதிரே வந்தது. அதைக் கண்டு, அவர்களில், ஒருத்தி, 'இது என்னடி, இழவு! ஒன்றின்மேல் ஒன்று. இருவரும் சேர ஒழிவார்கள் போல் தோன்றுகிறது. நாம் போவதற்குள்ளே எங்கே இறந்துவிடுகிறார்களோ!' என்றாள். எல்லோரும் கைதட்டிக் கொல்லென நகைத்தார்கள்.

அவர்கள் வழிநடந்து வந்து வேளாண் குளக்கரையை அடைந்து, கூடைகளை ஒரு மரநிழலில் இறக்கிவைத்து, கால் முகம் சுத்திசெய்து, இரண்டு கை தண்ணீர் அள்ளிக்குடித்து முன்றானையால் முகந்துடைத்து நிற்கையில், சிற்றூலைப்பட்டணத்திலிருந்து இழவுசொல்லவந்த மாதிகர்கள் எதிர்ப்பட்டுக் கவுண்டச்சிகளைக் கும்பிட்டு, 'சாமி, பாய்ச்சலூருக்குப் போகிற தடம் இதுதானே?' என்றனர். அவர்களில் ஒருத்தி, 'பாய்ச்சலூரில் யார்வீட்டுக்குப் போகின்றீர்கள்?' என்று கேட்டாள். மாதிகர், 'சாமி, பாய்ச்சலூர் எசமான்கள் வீட்டுக்குத்தான் போகிறோம். தேரோட்டத்தில் எசமானும் ஆசாரிகளும் சக்கரத்தில் அகப்பட்டு இறந்து போனார்கள்' என்றனர். அதுகேட்டு ஒருத்தி, 'நான் முன்னேயே சொல்லவில்லையா, பெரியவீட்டுக்காரன் சாவான் என்று?' என்றாள். மற்றொருத்தி, 'அவன் பெண்டாட்டியும் செத்துப்போனாள் என்கிறேன்; கேள், அவர்களை' என்றாள். மாதிகர்கள், 'இல்லை, சாமி, அவர்கள் சுகமாயிருக்கிறார்கள். பாய்ச்சலூர் எசமான்கள் இறந்துபோனார்கள்' என்றார்கள்.

அதுகேட்டு அவர்களில் ஒருத்தி, 'இந்தப் புத்திகெட்ட காமாட்டிப் பயல்கள் ஏதோ உளறுகிறார்கள்' என்றாள். மற்றொருத்தி, 'அடி, இவர்களைப் பார்த்தால் கள் குடித்திருப்பார்கள்போல் தோன்றுகிறது' என்றாள். மற்றொருத்தி, 'இவர்களைப் பிடியுங்களடி, உதையுங்களடி, காவலில் வையுங்களடி' என்று கொக்கரித்தாள். மற்றொருத்தி, 'இவர்களுக்கு என்னதெரியுமடி? வாருங்கள், போவோம்' என்றாள்.

கூடைகளை எடுத்துக்கொண்டு கவுண்டச்சிகள் மீண்டும் வழிநடந்து, சிற்றூலைப்பட்டணத்திற்குப் போய்க் கோவிலையடைந்து, தூரத்தேபிணக் கூட்டத்தைக் காணலும் அவர்களுக்கு வயிறு பகீரெனப் பற்றியெரிந்தது. ஓடிச்சென்று, சவங்களைச்சுற்றிக் குன்றுடையானும் தாமரையும் மற்றவர்களும் நிற்கக்கண்டு, ஐயம் நீங்கக் கோவென்றலறி யழுதார்கள். தாமரை ஓடிவந்து கைகலந்து புலம்பினாள். கவுண்டச்சிகள் மயிர்விரித்து மாரடித்து, ஒப்பாரிவைத்தார்கள்.

குன்றுடையான் கோடிப்புடவைகள் பன்னிரண்டு வாங்கிவந்து, வண்ணானையும் நாவிதனையும் அழைத்து,



குலாசாரப்படி சீர் செய்யச்சொன்னான்; ஒட்டனையழைத்துச் சவங்களைப் புதைக்கக் குழிகள் வெட்டச் சொன்னான். ஒட்டன், 'சாமி, பாய்ச்சலூர் எசமான்கள் யாரோ இருவரைப் புதைக்க ஒரு குழி வெட்டும்படி எனக்குப் பணங்கொடுத்தார்கள். நானும் அப்படியே ஒரு பெரிய குழிவெட்டியிருக்கிறேன். பாய்ச்சலூர் எசமான்கள் எல்லோரையும் புதைப்பதற்கு அந்தக்குழியே போதும். ஆசாரிமார்களுக்கு வேறு குழி வெட்டிக்கொள்ளலாம்' என்றான்.

பங்காளிகள்வெட்டுவித்த அந்தக்குழியிலேயே அவர்களுடைய பிணங்கள் பன்னிரண்டும் சேரப் புதைக்கப்பட்டன. பன்னிரண்டு மடிப்புடைவை கொண்டு கருமாதிகள் நடத்தப்பெற்றன. கவுண்டச்சிகள் கொணர்ந்த கூடைகளில் அவர்களுடைய நகைகளையும் தாலிகளையும் கழற்றிப்போட்டு, சுற்றிவந்து அழுதார்கள். கணவரை யிழந்த மனைவியர்க்குக் குன்றுடையானும் தாமரையும் குலவழக்கப்படி இராட்டைகள் கொடுத்து, அவர்களைப் பாய்ச்சலூருக்கு அனுப்பினார்கள்.

கணவனும் மனைவியும் குளித்து முழுகி, இதற்குள் நிலைக்குவந்த தேரையடைந்து, சுவாமியைஇறக்கி, மஞ்சள் நீராடி, அம்மனைக் கொலுவிருத்தி, ஆயிரம் பழத்தால் அபிடேகம்செய்தனர். பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு சோழமன்னரும் மற்றவர்களும் தங்கள்தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

கணவனும் மனைவியும் அரண்மனைக்குத் திரும்பிப் போயினர்.

---

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[228-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 2. களம் 3.

இடம்:—உரோமாபுரி. செனட்மண்டபத்தி னருகே ஒரு வீதி.

[ஆர்ட்டிமிடோரஸ் ஒரு காகிதத்தைப் படித்துக் கொண்டே வருகின்றான்.]

ஆர்ட்டிமிடோரஸ்:-(1) ஸீஸரே, ப்ரூட்டஸின் விஷயத்தில் சாக்கிரதையாயிரு; காஸ்ஸியஸ்ஸைக் கவனித்துக்கோள்; காஸ்க்காவிற் கருகே வராதே. ஸின்னாவிற்கோரு கண்ணிருக்கட்டும். ட்ரெபோனியஸ்ஸை நம்பாதே.மெட்டல்லஸ் ஸிம்பரைப்பார்த்துக்கோள்; டெஸியஸ்ப்ரூட்டஸ் உன்பால் அன்புடைய னல்லன்; கேயஸ் லிகேரியஸிற்கு நீ தீங்கிழைத்திருக்கின்றாய். இவர்களுக்கெல்லாம் இருக்கும் மனம் ஒன்றே—அது ஸீஸருக்கு விரோதமாய் வளைந்திருக்கின்றது (2). நீ சிரஞ்சீவிதான் அல்லையாயின் அக்கம்பக்கம் பார்த்து நட. (3). மதியாத துணிவு சதியாளர்க்கு வழிவிடுகின்றது(4). மோய்ம்புடைய தேய்வங்கள் நின்னைக் காத்திடுக. (5)

ஆர்ட்டிமிடோரஸ்

ஸீஸர் வருகின்றவரையில் இவ்விடத்தே நின்றிருந்து, விண்ணப்பம் ஒன்று செய்துகொள்பவன் போல் இதனை அவனுக்குக் கொடுப்பேன். அழுக்காற்றின் பற்களினின்று நற்குணப்பெருமைதான் வாழ்வதற் கியலவில்லையே என்னு லென் னிதயம் புலம்புகின்றது (6). இதனை ஓதுவாயாயின், ஓ ஸீஸரே, நீ உயிர் பிழைக்கலாம். அல்லையேல், விதிகளும் வஞ்சகர்களுடன் சேர்ந்து சதியே சூழ்கின்றன.

[போகின்றான்.]

குறிப்பு:—ஆர்ட்டிமிடோரஸ் என்பவன் அயல்தேயத்துச் செந்நாப் புலவன் ஒருவன். ஸீஸரின்பா லன்புடையவன். ஸீஸருக்கு அன்று சதியாளர் சூழ்ந்திருக்கின்ற தீமை எவ்வாறோ அவனுக்குத் தெரியவரலாயிற்று. இதனை ஸீஸருக்குத்தெரிவித்து அவனைக் காக்க முயல்வானாகி, ஒரு காகிதத்தில் இவ்விடயங்களை எழுதி, ஸீஸர் செனட் மண்டபத்திற்குப்போகின்ற வழியில்நின்று, ஏதோ தன் குறையைத் தீர்ப்பதற்குச் செய்துகொள்ளும் ஓர் விண்ணப்பம் போல் இதனை மெல்ல அவன்கையில் சேர்த்துவிடக் கருதுகின்றான்.

(1) ஆர்ட்டிமிடோரஸ் தான் எழுதிவைத்திருக்கின்ற கடிதத்தினின்று படிப்பது இது.

(2) இவர்களனைவரும் உன்னைக் கொல்லும்விடயத்தில் ஒற்றுமைப்பட்ட மனமுடையவர்களா யிருக்கின்றனர்—இங்கு இவர்மனம் ஓர் வில்லாக உருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. அம் மனமாகிய வில்லானது ஸீஸரின் மீது கொலையை எய்வதற்கு ஆயத்தமாய் வளைக்கப்பட்டிருக்கின்றது.

(3) ஸீஸரே, நீ மனிதனேயாதலின் மாய்க்கத்தக்கவன். நீசிரஞ்சீவி வரம் வாங்கியிருந்தாலன்றி இச்சமயம் சும்மா இருத்தலாகாது.

(4) அஞ்சாதநெஞ்சம் வீரமேயாயினும், ஆபத்தே தனக்கு ஒருபோதும் எவ்விதத்திலும் வரஇயலாது என்று அலக்ஷியமாயிருந்துவிடுதல் அழகன்று. நேரேவந்து எதிர்த்துப் போர்செய்பவர்களை அஞ்சவே வேண்டாம், உண்மையே. ஆனால், கரந்து செய்யும் வஞ்சனைகளினின்று கருத்துடன் காத்துக்கொள்ள வேண்டாவோ. இஃதின்றி, அலக்ஷியமாக இருந்துவிடுகின்ற குருட்டுத்துணிவினால்தான், சதியாளர் தம் தீயஎண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வழியும் சமயமும் ஏற்படுகின்றன.

(5) நீதான் உன்னையே காத்துக்கொள்ளாமல் போகின்றாயாதலின், தெய்வங்களேனும்இனி இடைவந்து உன்னைக் காத்தல் வேண்டும்.

(6) ஒருவன் பெருமைபெற்று உயர்வானாயின், மற்றவர்கள் பொறாமைகொண்டு அவனை என்தான் நாசஞ்செய்யப் புகுகின்றனரோ என்று வருந்துகின்றேன்.

---

### அங்கம் 2. களம் 4.

இடம்:—உரோமாபுரி—அவ்வீதியிலே ப்ரூட்டஸின் வீட்டிற்கு எதிராய வேறோர் பாகம்.

[போர்ஷியாவும் லூஸியஸூம் வருகின்றனர்.]

போர்ஷியா:—பிள்ளாய், உன்னை வேண்டுகின்றேன், செனட்மண்டபத்திற்கு ஓடு. எதிர்பேசி நிற்கா

குறிப்பு:—முன்களமும் இக்களமும் ஒரே காலத்தில் நிகழ்கின்றன. ஆயினும், இதற்கும் 2-வது களத்திற்கும் உள்ள காலத்தொடர்பு மயக்கத்திற்கிடமாகின்றது. நாடகநிகழ்ச்சி துவக்கிய நாள், லூபர்கல் திருவிழா, அதாவது பிப்ரவரி மாதம் 15வ. அன்றைய தினமே, காஸ்ஸி

தே; போ, போ, போய்விடு. என் நீ, நிற்கின்றாய்?

லூஸியஸ்:—செய்வது தெரிகற் கம்மா.

போர்ஷியா:—ஆண்டு நீ செய்யற்பாலது யாதென்றுனக்குநா னுரைப்பதன்முன், அங்குச் சென்று நீ மீண்டுமிங்கு வந்துவிட வேண்டுகின்றேன். ஓ, திட்பமே! என் சார்பு உறுதியாய் நில். என் இதயத்திற்கும் நாவிற்கு மிடையே மா பெரு மலையொன்றைக் கிடத்திவை! ஆண்மகன் மனமேனும், பெண்பாற்குரிய வலிமையே யானுடையேன். அரிவையர் தாம் இரகசியத்தைக் காத்துவைத்தல் என்பதெத்துணை கடினம்! (1)—இன்னும் நீ இங்கேயா இருக்கின்றாய்.

லூஸியஸ்:-அம்மா,யான் என்செயவேண்டும்?செனட் மண்டபத்திற்கு ஓடுவதும் — வேறொன்றுமில்லையா? உடனே உன்னிடம் திரும்புவதும்—வேறொன்றுமில்லையா?

போர்ஷியா:—ஆம், நோயுடன் வெளிச் சென்றான் உன் எசமானன்; மற்றுச் சுகமே யவன் தோற்றுகின்றானோவெனத் தெரிந்துவந் தெனக்குச்சொல்: அன்றியும், ஸீஸர் என்ன செய்கின்றான், விண்ணப்பதாரர் எவர் அவன்பால் நெருங்குகின்னர், இவைகளை நன்றாகக் கவனித்துக்கொள்—கேள்! என்ன அரவம் பிள்ளாய், அது?

லூஸியஸ்:—எனக்கு ஒன்றுங் கேட்கவில்லையே, அம்மா.

போர்ஷியா:—உற்றுக் கேள். பூசலைப்போன்று கலகலவெனவொரு குழப்பம் எனக்குக்கேட்டது.செனட் மண்டபத்தினின்று அடிக்கின்ற காற்றே அதனைக் கொணர்ந்தது. (2)

லூஸியஸ்:—உண்மையில், அம்மா, எனக்கொன்றுங் கேட்கவில்லையே.

[ஆர்ட்டிமிடோரஸ் வருகின்றான்] (3)

போர்ஷியா:—ஏனடா, இங்குவா. எவ்வழிச் சென்றிருந்தாய் நீ.

ஆர்ட்டிமிடோரஸ்:—என் மனையிடத்தே அம்மா.

போர்ஷியா:—மணி யென்ன?

ஆர்ட்டிமிடோரஸ்:—ஒன்பதுமணி யிருக்கு மம்மா.

போர்ஷியா:—ஸீஸர் செனட்மண்டபத்திற்குப் போய்விட்டானா?

ஆர்ட்டிமிடோரஸ்:—அம்மா, இன்னுமில்லை. செனட் மண்டபத்திற்கு அவன் செல்வதைப் பார்ப்பதற்குத் தக்க இடந்தேடி நிற்கவே போகின்றேன் நான்.

போர்ஷியா:—ஸீஸரினிடம் ஏதோ விண்ணப்பம் செய்துகொள்ளப் போகின்றாய், அல்லையோ?

ஆர்ட்டிமிடோரஸ்:—ஆம்; அம்மா, ஒன்றுளது. ஸீஸரின் நன்மையை நாடி ஸீஸர் எனக்குச் செவிகொடுக்க இசைவானாயின்,தன்னுடன் தானே நட்புடையனாதற்கு மன்றாடுவேன். (4)

போர்ஷியா:—ஏன்! அவன்பால் ஏதேனுந் தீங்கு நினைத்திருப்பதாக அறிவாயோ, நீ? (5)

யஸ் ப்ரூட்டஸின் மனத்தைக் கலைப்பதற்குப் பொய்க் கடிதங்கள் கற்பித்துச் சேர்ப்பிப்பதென்னுந் தீர்மானத்துடன், முதலங்கத்தின், இரண்டாவது களம் முடிவடைந்தது. மூன்றாங் களத்து நிகழ்ச்சிகளும் அந்நாள் இரவிலேயே நிகழ்ந்தவை என்பது எளிதில் புலப்படும். ஸீஸரை வீட்டிற்குக் கொணர்ந்தாயோ, என்று ஸிஸிரோ காஸ்காவைக்கேட்டு ஆரம்பிப்பதும், முன்குறித்தவாறு, ப்ரூட்டஸிற்குத் தென்படும்படி பொய்க்கடிதங்களைப் போடச் சொல்லிக் காஸ்ஸியஸ் ஸின்னாவினிடம் கொடுத்தனுப்புவதுடன் முடிகின்றதுமாகிய அம்மூன்றாங்களம், உற்பாதம் நிகழ்ந்த இரவு அப்பிப்ரவரி மாதம் 15உயே என்பதைக் காட்டுகின்றது. இரண்டாம் அங்கம் முதற்களம், அவ்விரவின் பிற்பகுதி. முன்களத் திறுதியில் புறப்பட்ட காஸ்ஸியஸ் முதலானவர்கள் ப்ரூட்டஸின் வீட்டிற்கு வந்து சேர்கின்றனர். ஸின்னா ப்ரூட்டஸின் சன்னலில் போட்டிருக்க வேண்டிய கடிதத்தை லூஸியஸ் கண்டெடுத்துத் தருகின்றான். ப்ரூட்டஸ் அதனை விண்கொள்ளியின் வெளிச்சத்தில் படிக்கின்றான். இனி, ஸீஸரை மறுநாள் செனட்சபைக்கு அழைத்துவருவதாக டெஸ்ஸியஸ் புறப்பட்டதும், இந்தக் களத்தில்தான். இரவின் உற்பாதங்களாலும், டெஸ்ஸியஸ் வருகையாலும், இரண்டாவது அங்கத்தின் இரண்டாம் களம், முதற்களத்தோடு தொடர்புபடுகின்றது. இக்களத்தின் இறுதியில் ஸீஸர் செனட் மண்டபத்திற்குப் புறப்படுகின்றான் அவ்வாறு வருவோனைத் தடுப்பதற்கு ஆர்ட்டிமிடோரஸ் முயற்சி செய்வது மூன்றாம்களம்; ஆகையால் இதுவும் அன்றைத்தினமே நிகழ்ந்திருக்கவேண்டும். இந்த நான்காம்கள நிகழ்ச்சியும் அன்றைக்கே என்பது வெளிப்படை. ஸீஸர் கொல்லப்படுவது இன்றைக்கு. ஆயின், நிமித்தகன் வாக்கின்படி அது மார்ச்சுமாத மத்தி யாதல் வேண்டுமே. மூன்றாவது அங்கத்தின் முதலிலும் அது வற்புறுத்தப் பெறுகின்றது. இதன்படி பார்த்தால் இரண்டாவது அங்கத்தின் இரண்டாவது களத்திற்றும் மூன்றாவது களத்திற்கும் இடையே ஒரு மாதம் கழிந்திருத்தல் வேண்டும். இந்த முரணிற்கு ஏதேனும் அமைதி யுண்டோ என்பதைப் பின்னர்க் கருதுவோம்.

(1) போர்ஷியாவின் பரபரப்பையும், அவள் பேசிய இவ்வாசகத்தையுங் கருதுங்கால், ப்ரூட்டஸ் தன் இரகசியங்களையும் ஸீஸரைக் கொல்வதற்குச் செய்திருக்கும் உபாயங்களையும் அவளுக்குச் சொல்லியிருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. எனினும், காதிற் பட்டவைகளைக் கொண்டு ஒருவாறு அவளே ஊகித்திருக்கலாம் என எண்ணுவதுங் கூடும்.

(2) செனட் மண்டபத்தில் ஏதோ பூசல் நடந்து அதனில் ஸீஸர் கொல்லப்படுவான் என்பது தெரிந்திருந்த போர்ஷியாவின் மனம் அதேநினைவா யிருந்தபடியினால், இன்னும் ஸீஸர் செனட்மண்டபத்தைச் சேரவில்லையாயினும், அங்கு ஏதோ கலகம் நடப்பதுபோன்ற ஒலி கேட்டு மயங்குகின்றாள்.

(3) சில பதிப்புக்களில், "ஆர்ட்டிமிடோரஸ் வருகின்றான்" என்பதற்குப் பதிலாய் "நிமித்தகன் வருகின்றான்" எனக் காணப்படுகின்றது. முன்னும் பின்னும் இவன் பேசுவதையும் செய்வதையுங் கருதுங்கால், மூன்றாம் களத்தில் வந்த ஆர்ட்டிமிடோரஸே இங்கும் வருகின்றான் என்று கொள்வதே சிறப்புடைத்து.

(4) ஆம், ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள இருக்கின்றேன். ஆனால் அது என்பொருட் டன்று, ஸீஸரின் பொருட்டே. தன்னைப்பற்றிக் கருதாமல்அவன் தனக்கே தான் பகைவனைப்போ லிருக்கின்றான். ஆதலின், நானவனை அவனுடனேயே நட்புச்செய்துவைக்க வேண்டும்—என்பது பொருள்.

(5) ஏதேனும் தீங்கு யாரேனும் நினைத்திருப்பதாக அறிவாயோ;—என்பதில் சதியாலோசனைக் காரர்களது சூழ்ச்சி வெளிப்பட்டுவிட்டதோ, என்ற ஐயம் போர்ஷியாவைப் பீடித்திருக்கும்.



ஆர்ட்டிமிடோரஸ்:—நிகழுமென்று யானறிய இருப்பதொன்று மில்லை; நேரலாமென்று யான் அஞ்சுவதோ அதிகம் (6)—உனக்கு வந்தனம் (7).தெரு இங்குக் குறுகியிருக்கின்றது. செனட் சபையினரும் அதிகாரிகளும் பொதுமனுதாரர்களுமாய் (8) ஸீஸரின் குதிகாலைத் தொடர்ந்துவருங் கூட்டம், நொய்ய என்போன்ற ஒருவனைக் கொல்வதேபோல் குவிந்துவிடும்: வேறோர் வெளியிடஞ் சென்றிருந்து மாபெரும் ஸீஸருடன் அவ்வழி அவன் ஏகுங்கால் பேசுவேன்.

[போகின்றான்]

போர்ஷியா:—யான் உட்செல்லவேண்டும். ஐயோ யானே! (9) மாதரார் இதயம் எத்துணை நொய்யது! (10) ஓ, ப்ரூட்டஸ், நீ தலைப்பட்ட கருமத்தில் விண்ணவர் விரைந்துதவுக! (11) — இச் சிறுவன் இதனைக் கேட்டுவிட்டான் திண்ணம்—ஸீஸர் அளிக்கமாட்டா விண்ணப்பம் ஒன்றுடையன் ப்ரூட்டஸ் (12)—ஐயோ, சோர்கின்றேன் நான்—ஓடி நீ, லூஸியஸ், என்தலைவற் கென் வந்தனையைச் செலுத்துவாய்; நான் உற்சாகமுடனிருக்கின்றேன் என்றுசொல் (13). மறுபடிவா, உன்னிடம் என்ன சொல்லினானென்பதை வந்தெனக்குச் சொல்.

[வேறு வேறு போகின்றனர்]

2-வது அங்கம் முடிகின்றது.

(6) நிச்சயமாக எனக்கொன்றுந் தெரியாது; ஆயினும், நேரலாம் என்ற சந்தேகம் எனக்கு அதிகம் உளது—என்பது பொருள்.

(7) உனக்கு வந்தனம், விடைபெற்றுக் கொள்கின்றேன்—என்பது பொருள்.

(8) மனுதாரர்—குறைகளைக்கூறி அவைகளை நீக்குமாறு வேண்டிக்கொள்பவர்.

(9) ஐயோ, யானே—என்பது தன்நிலையைக்குறித்துத் தானே பரிவுகூர்வது.

(10) தெரிந்த இரகசியத்தை மறைத்துவைத்துக் கொள்ளும் ஆற்றல்இல்லாமல் என் இதயம் தவிக்கின்றதே—எத்துணை முயன்றாலும் மாதர்களுக்கு இதற்கேற்ற வன்மை போதாது—என்கின்றாள்.

(11), (12). இவ்வாசகங்களை நோக்குங்கால், எல்லாச் செய்திகளும் போர்ஷியாவிற்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று நாம் நினைக்க நேர்கின்றது. ப்ரூட்டஸ் தலைப்பட்டகாரியம் கைகூடும்படி தெய்வத்தை வேண்டிக்கொள்வதால், தன்நாயகன் செய்வது இவளுக்கும் உடன்பாடாயிற்று என்றுங் கொள்ளவேண்டும். செய்யுங்கருமம் எதுவேனும், மண்டோதரி முதலாயினோர்போல், நாயகன் கருத்தினினின்று மாறுபட மறுத்துரைக்காத உத்தம மனைவியாதலால் போர்ஷியா இவ்வாறு வேண்டினாள் போலும்.

(13) இப்படி இவள் சொல்லி அனுப்பியதிலிருந்தே, இவளுக்கு இந்தக் காரியத்தில் சிறிதும் உற்சாகமில்லை என்று தெரிகின்றது. செய்யத் தகுவது ப்ரூட்டஸிற்குத் தெரியும், அதனை மறுப்பதற்குத் தான் யார் என்ற நிலைமையில் அடங்கியிருந்தாளேயன்றி, போர்ஷியா வேறொன்றுங் கருதினாளல்லள்.

## ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

முகவுரை

" அமிழ்தினுமினிய தமிழ்மொழி யகத்தே அன்பும் இன்பும், அறனும், மறனும் சான்ற அகத்திணை புறத்திணை தழுவிய துறைவகைகளில் தொன்றுதொட்ட வழக்காயுள்ள பனுவல்கள் எத்துணையோ பல வுள்ளன; அவற்றுள், 'பிள்ளைத்தமிழென்னும் பிரபந்தவகையும் ஒன்று.

'பிள்ளைத்தமிழ்' என்பது பெறலருஞ் சிறப்புவாய்ந்த மக்கட்குழவியைப் பாராட்டிப்பாடும் இனிய பாடல்களாலாகிய பிரபந்தம் என்று பொருள்படும். இங்குத் "தமிழ்" என்னுஞ்சொல் பிரபந்தத்தை யுணர்த்துமென்பதை,...........இயலிசை நாடக நூல்களை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனவும், முத்தமிழ் எனவும் வழங்குதலா லறிக.

"இப்பிரபந்தம் புறப்பொருள் வகையாகிய பாடாண் திணையில் 'குழவி மருங்கினுங் கிழவதாகும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் கொள்ளப்பட்ட * காமப்பகுதியின்பாற் பட்டு மக்கட்குழவிக் குரித்தாக வழங்கப்படுமாயினும், ஓரோவழி, தெய்வத்தோற்றமாகிய மக்கட்குழவியின் பருவத்தை ஆரோபித்தலால் அக்குழவியோ டொற்றுமையுடைய தெய்வத்துக்கும் உரியதாக வழங்கப்படும். இச்சூத்திரத்தில் கிளப்பதாகும் என்னாது 'கிழவதாகும்' என்ற குறிப்பால் குழவிப்பருவங்கழிந்த முதியரை அவரது குழவிப்பருவம்பற்றிப் பாராட்டிப் பாடினும் அப்பாட்டில், அம் முதியரோ டொற்றுமையுடைய அக்குழவிக்குஉரிமையுடைமையா லது வழுவாகாதென்று கொள்ளப்படும்.

"இப்பனுவலைப் பன்னிரு பாட்டியலுடையார் பிள்ளைப்பாட்டென வழங்கி, இலக்கணம் பல தாமியம்பியும், ஆன்றோர் கூறிய சில இலக்கணங்களை யெடுத்துக்காட்டியும் போந்தனர்; வெண்பாமாலையுடையார் 'இளமைந்தர் நலம்வேட்ட வளமங்கையர் வகையுரைத்தல்என்னும்" குழவிக்கட் டோன்றிய காமப் பகுதியின்பாற் படுப்பர்.‡

"வழக்கொடு சிவணிய வகைமை யான' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துள், 'சான்றோர் செய்த புலனெறி வழக்கோடே பொருந்திவந்த பகுதிக் கண்ணேயான பொருள்களுள்' 'குழவி மருங்கினுங் கிழவதாகிய பிள்ளைப்பாட்டுப் பொருள்களையும் அகப்படுத்துக் கூறியிருத்தலால் இப்பிரபந்தவகை தொல்காப்பியர்காலத்திற்கு முற்பட்ட சான்றோராற் செய்து போந்த பழைய வழக்குடையதென விளங்குகின்றது. இதற்குதாரணமாகப் பெரியாழ்வார் திருமொழியுட் பல்வேறு பொருள்வகைகளாலும் பிள்ளைப்பாட்டுப்

*இங்குக் கூறிய காமப்பகுதியாவது, பெறலரும் பிள்ளையைப்பெற்ற தாய் முதலியோர் பாராட்டுதற்குரிய, 'குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து, நெய்யுடையடிசின் மெய்பெற விதிர்த்தும் விளையாடுதன் முதலிய செயல்களை யனுபவிக்குமவரிடைத் தோன்றும் ஒரு தலையின்பம், இதனை மக்கள் மெய்தீண்டலூடற்கின்பமற்றவர் சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு, என்றற்றொடக்கத்தானுமறிக. இதனாலவர் விளையாட்டுக் காண்டலும் கட்கின்பமென்பது போதரும்.

‡ (இளமைந்தர் நலம்வேட்ட வளமங்கையர் வகையுரைத்தலாவது) கண்ணபிரானது இளமைப்பருவ விளையாட்டின் பத்தை விரும்பி யசோதைப் பிராட்டியும் இடைப்பெண் [illegible] டியைப் பெரியாழ்வார் அனுசரித்தல் போல்வது.

பாடப்பெற்றிருப்பதுகாணத்தகும். அதன்கண், தால், சப்பாணி, செங்கீரை, முதலியவற்றுடன், இக்காலப் பிள்ளைத்தமிழி லில்லாத, பிறப்பின் உவகை, பாதாதி கேசக்காட்சி, தளர்நடை, அச்சோ அச்சோ, புறம் புல்கல், அப்பூச்சிகாட்டல், நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், அம்மமூட்டல், முதலிய பல்வேறு பொருள்பற்றிய பாராட்டல்கள் உள்ளன.

"இங்ஙனம் பல பொருள்களிருப்பவும், ஒரு பொருள்பற்றிப் பாராட்டும் பாட்டுத் தனித்தனி பதிகமாகவும், பிரபந்த முழுதும் சதகமாகவும் ஓரளவுடையதாக முடிக்கவேண்டிக் காப்புமுதற் சிறுதேரிறுதியான பத்துப் பொருள்களை இப்பிரபந்தத்துக் குரியனவாகப் பிற்காலத்தார் தெரிந்தெடுத்து நியமித்துப் போந்தனர் போலும்''

[திருமாலிருஞ்சோலை மலை அழகர் பிள்ளைத்தமிழ் முகவுரையின் முற்பாதி.—செந்தமிழ்ப் பத்திராதிபர் திரு. நாராயண ஐயங்கார்]

இப்பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இருவகைப்படும்.

சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து.

(வெண்பாப் பாட்டியல்.)

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழினிலக்கணம். இப்பத்துப் பருவங்களில் சிறுபறைகொட்டல், சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டல் ஆகிய மூன்று பருவங்களொழித்து, நீராடல் அம்மனை, ஊசல், ஆகிய மூன்று பருவங்கள் சேர்த்துப் பாடப்பெறுவது பெண்பாற் பிள்ளைத்தமிழி னிலக்கணம்.

இங்ஙனம் அருமைமிக வாய்ந்து தொன்றுதொட்டு வழங்கப்பெறும் பிரபந்தவகையிற் சேர்ந்த பிள்ளைத் தமிழ்களிற் சிறந்தவற்றுள் இந்த ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழு மொன்றென் றெண்ணத்தக்து.

இப் பிள்ளைத்தமிழ் சிறந்த செந்தமிழினு லமைப்பெற்று, திணைமயக்கம், கற்பனை, சிலேடை முதலிய அணிகள்பொருந்திக் கற்போர்மனதைக் கவர்தற்குரிய ஆழ்ந்த பொருள்வன்மை யுடையது. இதனை இயற்றிய புலவர்தம் பெயருங் காலமுந் தெரியவில்லை.

இஃது திருவெண்ணெய் நல்லூரிற் கோயில்கொண்டெழுந்தருளிய வைகுந்தநாதப் பெருமான்மீது பாடப்பெற்றிருத்தலின், இந்நூலாசிரியர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்தாமோ எனச் சிலர் ஐயுறுகின்றனர்; அது நிலையுடையதன்று. கம்பர் இருந்த திருவெண்ணெய்நல்லூர் வேறென்றும், பெண்ணைநதி சூழப்பெற்ற இத்திருவெண்ணெய்நல்லூர் வேறென்று மறியாச் சிலர் கூற்றுகும் அது.

கவிச்சக்கரவர்த்திக் கம்பரது பாடலுக்கும் இப்பாடலுக்கும் பொருணிலைகளிற் பல வித்தியாசமிருத்தலின் இந்நூலாசிரியர்கம்பரன்றென்பது கற்றறிந்தோர்க்குத் தெற்றெனப் புலனும்.

ஆயினும் இந்நூலியற்றியவர், பிற்காலத்தியபுலவர்களுட் சிறந்த செந்தமிழ்ப் புலவர் ஒருவர் என்று ஒருவாறு தெரியக் கிடக்கின்றது.

ஆழ்வார்துதி யில்லாமற் பிரபந்தம் ஆரம்பித்தலால் இவர் வைணவசம்பிரதாய நூல்கள் உணராதவரென்றும், விநாயகர் துதியில்லாமற் பாடியதால் ஓர் வைணவரென்றும் ஊகிக்கலாம்.

எப்படியாயினும் இவர் ஓர் சிறந்த புலவரென்றும் சிறந்த செந்தமிழிலக்கியங்களில் இதுவும் ஒன்றென்றுந் துணியற்பாலதாம்.

இவ்வரிய பிள்ளைத்தமிழினைத் தமது "கலாநிலய"ப் பத்திரிகையில் வெளியிடுவதற்கிசைந்த ஆசிரியரவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகுக.

இப் பிள்ளைத்தமிழை என்னிடம் இருந்த ஓரே பிரதியினுல் பெயர்த்தெழுதுங்கால் இதனிற் பல இடங்களில் சந்தேகம் விளைந்தது; அப்பொழுது வளவனூர் ஸ்ரீமான் தே. சடகோபப் பிள்ளையவர்கள் தம்மிடம் இருந்த பிரதியைக் கொடுத்துதவினுர். அதனுல் மனத்தெழுந்த சந்தேகங்கள் நீங்கின. அன்னுர்க்கு எனது நன்றி யுரித்தாகுக.

கி. வெங்கிடசாமி ரெட்டியார்.

குறிப்பு:—இதுகாறும் அச்சேருதனவும், அச்சேறியிருப்பினும் அகப்படாதனவுமாகிய நூல்களை, வேண்டுமிடத்து உரைகள் இயற்றியும், வேண்டாவிடத்து மூலத்தை மட்டுமேனும், பதிப்பித்துத் தருகின்ற முறைமையுந் தன் கருமங்களிலொன்ருய்க் கொண்டிருக்கின்ற கலாநிலயத்தின்கண், மாறன் பாப் பாவினம், குறுந்தொகை, களவியற்காரிகை, சூளாமணி, தினகரவெண்பா, முதலிய நூல்கள் வரலாயின. இப்பொழுது துவக்கப்பெறும் இப் பிள்ளைத்தமிழ், ஸ்ரீமான் கி. வேங்கடசாமி ரெட்டியாரவர்களால் பதிப்பித்துத் தரப்பெறுகின்றது. இந்நூலின் சொன்னயம் பொருள்நயம் சந்தவழகு முதலியன ஓதுவோர் மனங்களை மகிழ்விக்கும் என நம்புகின்ருேம்.

ஆசிரியர்

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[237-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) மூன்ருவதுவகை ஏதுப்போலி அநைகாந்திகம் என்னப்படும். இதில்சாதாரணம்அசாதாரணமென உட்பிரிவு இரண்டாம். அநைகாந்திகம் என்பது ஆங்கிலத்தில் Unwarrented Premises என்னலாகும். அதாவது பிறழ்வோடு கூடிய ஏதுப்போலியாம்.

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரு பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடையா நின்றிடு மானைக்கா வண்ணலே.

திருவானைக்கா - திருக்குறுந்தொகை - 6.

பொய்யெ லாமுரைக் குஞ்சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா தெழுமினோ
ஐய னென்பிரா னன்பிலா லந்துறை
மெய்யன் சேவடி யேத்துவர் மெய்யரே.

திருவன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை 9.

இவ் வேதுப்போலி குறியைப்பற்றியும், கூறையிலாததுமென்பர் திருநாவுக்கரசர்,

குழியினின் றுண்டு கூறையி லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்



அறிய வுற்றிரேல் கானூர் முளையவன்
செறிவு செய்திட் டிருப்பதென் சிந்தையே.

திருக்கானூர் - திருக்குறுந்தொகை 4.

சாதாரண அநைகாந்திகமாவது - பக்கம், விபக்கம், சபக்கம் இம்மூன்றிலுமிருப்பது. (உ-ம்)சத்தம் நித்தியம்,பிரமேயத்தன்மையால்: ஆகாயம்போல்.இதில்பிரமேயத்தன்மை ஏது நித்திய அநித்தியத் திருப்பது. பிரமேயத்தன்மை யென்னும் ஏது,நித்தியமென்னும் சாத்தியமில்லாத சத்தமென்னும் பட்சத்திலும், சபட்சமாகிய ஆகாய முதலியவற்றினும்,விபட்சமாகிய கடாதிகளினு மிருத்தலின் சாதாரணமாயிற்று. எல்லாம் பிரமேயமாதலின் பிரமேயம் * எல்லாவற்றினு மிருக்கும். ஈண்டு நித்தியப்பொருள் சபக்கமும் அநித்தியப் பொருள் விபக்கமுமாம்.

மற்றும், "பர்வதம் வன்னியுடைத்து—பிரமேயமாகலின்" என்புழி, பிரமேயமென்னும் ஏது, சாத்தியத்தின் ஆசிரயமாகிய பக்கத்திலும், சபக்கமாகிய அடுப்புக்களிலும், விபக்கமாகிய மடுக்களினு மிருத்தலின், சாதாரண அநைகாந்திக வேதுவாம். இது சாத்தியமுள்ள † பக்கத்திலுமிருக்கும், ஏனைய பக்கத்திலுமிருக்கும். இவ் வேதுப்போலியின் உருவம் பெற்ற $ சொற்றொடர்களையமைத்து அப்பர் சில பாசுரங்கள் பாடிய நயம் காண்க :—

பேற்றம் ஏறுவர் பேய்பலிக் கேன்றவர்
சுற்ற மாமிகு தொல்குழ லாளொடும்
அற்றந் தீர்க்குமண் ணுமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே.

திருவண்ணமலைத் திருக்குறுந்தொகை 2

அசாதாரண அநைகாந்திகம் என்னும் ஏதுப்போலி, சபக்க விபக்க நீக்கமாய், பக்கமாத்திரமா யிருப்பது. உதாரணம். "நிலம் - நித்தியம்; மணமுடைமையால்!' மணமுடைமையாலென்னும் ஏது ஆகாயம் முதலிய சபக்கத்தினும், விபக்கமாகிய கடம் முதலியவற்றினுமில்லாதது. பக்கமாகிய நில (பிரதிவி) மாத்திரையினிருத்தலின் அசாதாரண மாயிற்று. வியாத்தியின்கண் ஐயமுண்டாய வித்துவியாத்தியைக் கிரகித்தல் கூடாமையாயின் இவ்வேதுவும் ஆராய்ச்சிக்குத் தடையாயிருக்கின்ற தென்றுணர்க.

மணமுடைமையால் என்னும் ஏது திருஷ்டாந்த (சபக்க) மின்மையின் அன்னுவயி யேதுவன்று; வியதிரேகி ஏதுவாம். *

(iv) நான்காவது வகை ஏதுப்போலி, பிரகரண சமம் என்பது. எவ்வேதுவுக்கு(சாத்திய விபரீதத்தை) துணிதற்பொருட்டு மறுதலையாய துணிந்தபொருளைச் சாதிக்கும் வேறு ஏது (ஏதுவந்தரம்) ஏது உண்டோ அதுவே பிரகரண சமம். உதாரணம்:—"சத்தம் அநித்தியம்; நித்தியதருமம் தோன்ருமையால்" என்றும், "சத்தியம் நித்தியம் அநித்தியதரும மின்மையால்'' என்றும் வருவனவாம்.

சாத்தியத்திற்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்கும் சமபலமாகிய வேருேர் ஏதுவையுடைய ஏது பிரகரண சமம் என்னும் சற்பிரதிபக்கமாகும். இந்த ரூபத்தில் ஒருவகைச் சொல்லணி பெற அப்பர் பாடுவது காண்க:—

முழுத்தழன் மேனித் தவளப்
பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பெருஞ் சோதியை யெங்கள்
பிரானை யிகழ்ந்தீர் கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு
வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர் தம்மாற்
ருெழுவிக்குந்தன் ருெண்டரையே.

தனித் திருவிருத்தம் - 5.

(v) ஐந்தாவது வகை காலத்தியயாபதிட்டம் என்பது. இது பக்கத்திற் பிரமாணுந்திரத்தாற் றுணிந்த சாத்தியவின்மையேது பாதித விடயம். காலத்தியயாபதிட்டமெனவுங் கூறப்படும். (உ - ம்) தீ வெம்மையிலது, பதார்த்த தத்துவத்தால்.புனல்போல:-இத்தகைய உதாரணம் வெளிப்படையில் ஏதுப்போலியைக் காட்டுமாயினும் இவ்வாய்பாட்டிற்குக் கொண்டுவரத்தக்க தொடர்நிலை விஷயங்களை வெளிப்படையில் காட்டாதனவுமுண்டு.

கரும்பு பிடித்தவர் காயப்பட்டார்
அங்கோர் கோடலியா
விரும்பு பிடித்தவ ரின்புறப்
பட்டா ரிவர்கணிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழணி
யாரூ ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதொன்று
நானுன்னை வேண்டுவனே.

திருவாரூர் - திருவிருத்தம் 5.

என்னும் திருநாவுக்கரசின் பதிகம் காண்க. பரமனைப் பித்தன் என்றும் படிறனென்றும் வஞ்சகனிகழ்ச்சியணிகள் தேவாரத்திலுள்ளன யாவும் இவ்வாறுஏதுப் போலிகளின் உருவமாத்திரம் காட்டி உண்மையில் களங்கமற்ற சத்தேதுக்களில் நிலைபெறும். அவை அப்பர் பதிகங்களில் ஆங்காங்கு நிறைந்து விளங்குவனவற்று லுணர்க.

* பிரமாணத்தா லறியப்படுவது பிரமேயம்.

† வியபிசார ஞானமுண்டாயவிடத்து வியாக்தியைக் கிரகித்தலுண்டாகாமை மிகப்பிரசித்தமாயிருத்தலின் இவ்வேது ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்துகொண்டே அநுமிதிக்குத் தடையாயிருக்கின்றதென்று தர்க்கநூலார் கூறுவர்.

$ மலையலா விருக்கை யில்லை
மதித்திடா வரக்கன் றன்னைத்
தலையலா னெரித்த தில்லைத்
தடவரைக் கீழ டர்த்து
நிலையலார் புரங்கள் வேவ
நெருப்பலால் விரித்த தில்லை
யலையினுர் பொன்னி மன்னு
மையனை யாற ஞர்க்கே.

திருவையாறு - திருநேரிசை 10.

* புல்ல மூர்த்தியூர் பூவனூ ரும்புனல்
நல்ல மூர்த்தி நல்லூர்நனி பற்றியூர்
தில்லை யூர்திரு வாரூர்சிக் காலிநல்
வல்ல மூரென வல்வினை மாயுமே.

திருப்பூவனூர் - திருக்குறுந்தொகை. 5

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[234-வது பக்கத் தொடர்ச்சி]

காரணத் துண்மையே காரிகை காரியம்.

சிலேடைத்திறத்தினல் மாத்திரமன்றிச் செய்கின்ற தொழிலாலும் சான்றோர்கவிக்குக் கோதாவரி நிகராயிற்றென்பதை நினைவுசெய் தளிப்பாராகி,

வண்டுறைகமலச்செவ்விவாண்முகம்பொலியவாச
முண்டுறைகுவளையொண்கணெருங்குறநோக்கியூழிற்
றெண்டிரைக்கரத்தின்வாரித்திருமலர்தூவிச்செல்வர்க்
கண்டடிபணிவதென்னப்பொலிந்ததுகடவுள்யாறு

[வண்டுகள் அடர்ந்த செந்தாமரையாகிய அழகிய ஒளிபொருந்திய முகம் விளங்க,வாசனை தங்கிய குவளைகளாகிய ஒளிபொருந்திய கண்களால் உற்றுப்பார்த்து, வரிசையாய் அசைகின்ற தெளிந்த அலைகளாகிய கைகளால்வாரி அழகிய மலர்களைத் தூவி, இராமஇலக்குமணர்களைக் கண்டு அவர் பாதங்களை வணங்குவதுபோலத் தெய்வத்தன்மை பொருந்திய அந்நதி விளங்கியது]

எனக் கம்பர்பிரான் அடுத்த செய்யுளை அமைத்திருக்கின்றார். 'கல்வியோ கல்வி' என்னக் கடைத்தெருநின்று கழுத்துவீங்கக் கதறுவோரெல்லாம், "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ னற்றாடொழாஅ ரெனின்" என்னுமத் தெய்வமொழியி னிதயத்தில் முதிர்ந்தமுடிவை மனமேனுங் கொள்ளும்வகைபெற்றுளராயின் பின்னென்று பெரிதுபேச உன்னமாட்டார். வாலறிவன் நற்றாள் தொழுமாறு பயன்செய்யும் கல்வியே மெய்க்கல்வி; அம் மெய்க்கல்விதான், சான்றோர் கவி; பிறவெல்லாம் போலிகளே. அச் சான்றோர்கவி தான் செய்வதையே மற்றவர்களையுஞ் செய்விக்கின்ற செம்மை வாய்ந்ததெனக் காட்டுவார்போல்,கோதாவரியாறு எம்பெருமான் அடிபணிவதென்னப் பொலிந்ததென்று கம்பர்பிரான் பாடலானர்

இதனைத் தொடர்ந்த செய்தி இன்னுமொன்றுளது. மெய்க்கல்வியின் பயனாய் வாலறிவன் நற்றாள் தொழுமவர் தொழிலுந் தோற்றமும் இன்னதெனச் சாற்றுவான் நினைந்து இதற் கடுத்தசெய்யுளில் நந்தம் புலவர் பெருந்தகை,

எழுவுறு காத லாலிங் கிரைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலாவாய்மை மைந்தர்வனத்துறைவருத்தம்நோக்
அழுவது மொத்த தாலவ் வலங்குநீ ராறு மன்னோ[கி

[வழுவாத வாய்மையுடைய அம் மைந்தர் வனத்தில் வசிக்கின்ற வருத்தத்தைப் பார்த்து, மிகுகின்ற அன்பினல் மனமிரங்கி, தொகுதியாகி யிருக்கின்ற புதிய குவளைமலர்களாகிய கண்களினின்று தேஙகிய நீர்த்துளி பாய்ந்து வழிய, கதறிக்கதறி அழுவதையும் போன்றது, அசைகின்ற நீருடைய அந்தக் கோதாவரி நதி]

எனவெடுத் தியம்புகின்றார். பிறர்துயர் கண்டு புலம்புமாறு புரிவது மெய்க்கல்வி செய்யும் பயன். செய்விப்பதைத் தானுஞ்செய்தமைவதால் சான்றோர் கவியெனக் கிடந்த இக் கடவுள்யாறு, மைந்தர்கள் வனத்துறை வருத்தம் நோக்கி அழுவது மொத்ததாயிற்று.

இன்னதோர் தன்மை வாய்ந்த இவ்விரு நதிக்கரையின் பாங்கர்த் துன்னிய இராமன் சீதை இலக்குவன் ஆய மூவரும்,அன்னதன் வளங்கள் கண்டு களிப்புடன் சென்ற செவ்வியை நன்னயம் மிகவுஞ் சான்ற கவிகளால் நவின்றார் கம்பர் :—

நாளங்கொ ணளினப் பள்ளி
நயனங்க ளனைய நேமி
வாளங்க ளுறைவ கண்டு
மங்கைதன் கொங்கை நோக்கு
நீளங்கொள் சிலையோன் மற்றை
நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத் தன்ன
சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

[தண்டு உடைய தாமரைமலராகிய படுக்கையில்,கண்கள் போன்று இரட்டையாக உள்ள சக்ரவாளப் பறவைகள் தங்கியிருப்பனவற்றைப் பார்த்து, நீண்ட வில்லை உடைய இராமன், உடனே சீதையின் முலைகளைப் பார்ப்பான். மற்று, நேரிய ஆபரணங்களை அணிந்த சீதை, இராமனது தோள்களில் தன் நினைவை வைத்து, அத் தோள்களைப்போன்ற இரத்தினங்கள் குவிந்த மணற்குன்றுகளைப் பார்ப்பாள்]

ஒருவரை யொருவர் பரிவுடன் இனிதுபார்த்துவக்கும் இது நெருங்கிவரும் பிரிவுநாளின் அவலத்தைப் பெரியதாக்குகின்றது.

ஓதிம மொதுங்கக் கண்ட
உத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தாள்
மாதவ டானு மாண்டு
வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்

[அன்னப் பறவை, நாணத்தால் விலகுவதைப் பார்த்த இராமன், தன் அருகிலுள்ள சீதையின் நடையைப் பார்த்துச் சிறுநகை செய்தான். அங்கு வந்து நீர்குடித்து மீளும் ஆண்யானை விலகிநடப்பதைப் பார்த்துச்சீதையும் இளநகை செய்தாள்]

வில்லிய றடக்கை வீரன்
வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக ளுடங்கக் கண்டான்
மங்கைதன் மருங்கு நோக்க
எல்லியங் குவளைக் கானத்
திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டா
ளண்ணறன் வடிவு கண்டாள்

[வில் ஏந்திய பெரிய கையையுடைய இராமன், பெருகுகின்ற நீரையுடைய அந்நதியில், நீர்க்கொடிகள் அசையக் கண்டு சீதையின் துவள்கின்ற இடையைப் பார்த்தலும், அவளும், இருள்போல் கரிய குவளைக்காட்டின் இடையிடையே மலர்ந்து நின்ற அக இதழ்களையுடைய அழகிய செந்தாமரை மலர்களைப்பார்த்து இராமனுடைய வடிவை நோக்கினள்]

இன்னவாறிவர் எதிரெதிர் நோக்கிப்புரிந்த மென்னகையினராய் இலக்குவன் விலகிமுன்செலச் சென்று பஞ்சவடியெனும் பருவச்சோலைத் தனியிடம் நண்ணித் தம்பியாற் சமைக்கப்பட்டவோர் பன்னசாலையில்வைகி வாழும்நாள், வஞ்சமக ளொருத்தி களத்தினுள் தன்

கரியாக்கும் கால்களை வைத்து வருகின்றாள். யாவளோ அவளெனில்,

நீலமா மணநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்
மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்

[நீலமணிபோன்ற கரியநிறமுடைய அரக்கர் தலைவனாகிய இராவணனை வேரோடும் நாசமாகும்படி அழிக்கக்கூடிய வல்லமையுடையவள். பிறந்தபொழுதே' உயிருடன் கூடப் பிறந்து, தான் விளைந்து பலனளிக்க வேண்டியகாலத்தையும் அறிந்து அதுவரையில் கூடவே தங்கியிருக்கின்றகொடிய நோய் போன்றவள்]

செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினள்
உம்பரா னவர்க்குமொண் டவர்க்கு மோதநீர்
இம்பரா னவர்க்குமோ ரிறுதி யீட்டுவாள்.

[அடர்ந்த செம்பட்ட மயிருடையவள். கொடிய பாம்பாகிய இராகுவைப்போல் வளர்ந்த சரீரமுடையவள். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும், கடலாற் சூழப்பட்ட பூலோகத்திலுள்ள மனிதர்க்கும், ஓர் முடிவு செய்துவைப்பவள்]

வெய்யதோர் காரண முண்மை மேயினள்
வைகலுந் தமியளவ் வனத்து வைகுவாள்
நொய்தினிவ் வுலகெலா நுழையு நோன்மைய
ளெய்தின ளிராகவ னிருந்த சூழல்வாய்

[கொடியதோர் காரணத்தின் உண்மையைப் பொருந்தியவள். எப்பொழுதும் அவ்வனத்தில் தனியாய் வசிப்பவள். மிக எளிதில் இவ்வுலகமெல்லாம் நுழைந்து புறப்படும் சக்தியுடையவள்—இராகவன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனள்]

நாடக நவிற்சியின் நயமிகத் தவழவரும் பாசுரங்கள் இவை. பேருரைக்காவிடினும், "நிருதர் வேந்தனை மூலநாசம்பெற முடிக்கும் மொய்ம்பினள்," என முடிவை முதல்வைத்துத் துவக்கிய வொன்றே இவள்யாரெனப் பறைசாற்றுகின்றது. உடன்பிறந்தே கொல்லும்வியாதியாய்த் தன் அண்ணனுக்கு அமைந்த இவள், சீதை தன்கண்களிக்கக் கண்டுவந்த அண்ணலைக்காணநேர்ந்த கொள்கையைக் கம்பர்,

எண்டகு மிமையவ ராக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலைநா
ளண்டசத் தருந்துயி றுறந்த வையனைக்
கண்டன டன்கிளைக் கிறுதி காட்டுவாள்

[எங்கள்மீது அரக்கர் பகைகொண்டுளர், அத்துன்பத்தை விலக்குவாய் என்று நன்கு மதிக்கத்தகுந்த தேவர்கள் முன்னொருகாலத்தில் வேண்டிக்கொள்ள, ஆதிசேடன் மீதுதான் அமர்ந்திருந்த அருந்துயில் நீங்கி வந்த இராமபிரானை, தன் சுற்றத்தார்க்கெல்லாம் அழிவைச் செய்துவிக்க வந்த இவள் கண்டனள்]

என ஊக்கமொடு உரைக்கின்றார். 'இராமனைக் கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்' என்னுமிவ்வமைப்பே இவள் காண்பதொன்றுங் காட்டுவதொன்றுமாய் முடியநிற்குஞ் செய்தியைக் கருதி நகுகின்றது. மனங்கவர் வனப்பமைந்த வோர் மெல்லுருத்தாங்கி மோகித்த மனத்தோடும் சிறிதுபின்பர் இராமன்பால் உரையாடப்புக்க இவளை, "தமியை நீ வருதற்கொத்த தன்மை என் தையல்" என அவன் வினவலும் இவள், "காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன்" என எதிருரைப்பாள்; ஆயினும் அவளை இங்கு, "வெய்யதோர் காரணம் உண்மை மேயினள்" எனக் கம்பர் குறிக்கின்றார். இதனால், காரண காரியத் தொடர்பின் தத்துவம் அரிதின் அறிவுறுத்தப் பெறுகின்றது. நிருதர்வேந்தனைத் தன்கிளையோரோடு மூலநாசம்பெறமுடிப்பதற்குக் காரணமொன்றுகின்றது இவள் இன்று இராமனைக்கண்ட காட்சி. ஆயினும், இதுதான் அம்மூல நாசத்திற்கு மூலகாரணமன்று. மூலகாரணமென்று எதையேனும் இவ்வுலகில் இயம்ப இயலுமாயின், இதற்குமூலகாரணமாவது அரக்கர்செய்த தீவினைகளே என்னல்வேண்டும். ஆதலின், மேற்பார்வைக்கு, இராமனை இவள்சந்தித்த இதுவே இராவணன் வதத்திற்குக் காரணம்ஆவதுபோல் தோன்றினும், உண்மையில் இதுதான் அவ்விராவணன் இழைத்ததீமைகளின் காரியமாவதே இத்தொடர்பின் முதற்படி ஆகி நிற்கின்றது. எனின், சூர்ப்பணகை, "காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன்" என்னலாயது, அவள் ஓரமலேனும், இதனைத் தழுவியே எழுந்த சொற்களாமென நினைக்க நேர்கின்றது. எனின், இன்னவாறு, ஒன்றே முன்னொன்றின் காரியமாயும் பின்னொன்றின் காரணமாகவும் நின்றும் நிகழ்த்தியும் அமைகின்ற பெற்றியை "வெய்யதோர் காரணம் மேயவள்", "காரியம் உண்மையால் காணியவந்த" நெறிமுறையாற் கம்பர் வற்புறுத்துகின்றனர். இதனையே, பின்னரிந் நிருதர்வேந்தன் தன்சரித்திரத் திறுதிகண்டு சாய்ந்தநாள்சோகமுற்றுப் புலம்பிய மண்டோதரி,

காந்தையருக் கணியனைய சானகியார்
பேரழகு மவர்தங் கற்பும்
ஏந்துபுயத் திராவணனார் காதலுமச்
சூர்ப்பணகை யிழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா

[மாதர்களுக்கெல்லாம் ஓர் அணிகலம்போன்ற சீதையின் பேரழகும், அவள் கற்பும், உயர்ந்த புயங்களையுடைய இராவணன் அவள்பால் கொண்ட காதலும், அச் சூர்ப்பணகை இராமனைச் சந்தித்து மூக்கை இழக்கநேர்ந்ததும், அரசர்க்கரசனாகிய தயரதன் இட்ட கட்டளைப்படி இராமன் தவக்கோலம் அணிந்து கொடிய காட்டிற்கு வந்ததும், எல்லாம் கடைசியில் இந்திரன் செய்த பெரிய தவத்தின் பயனாகவே முடிந்ததே]

என வியந்துரைந்த வாசகங்களிலும் காணலாம். இடைநிகழ்ச்சிகளெல்லாம், ஒன்றற்கொன்று கடைமுறை நோக்குங்கால், காரணகாரியத் தொடர்புபெற்றுத்தோன்றுகின்றனவாயினும், இவையனைத்திற்கும் தோன்றாக் காரணமாய்நிற்பது புரந்தரனார் பெருந்தவம் என்பதை நினைவுசெய்துகொள்கின்றனள். கொண்டான்பால் குறைகாணா உத்தமி இவள் ஆதலின் அதன்மேற் சென்றிலள். புரந்தரனார் பெருந்தவமே மூலகாரணம்போல் முடிக்க முயல்கின்றாள். எனினும், அமரர்தலைவன் வரங்கள்பெறவேண்டியதாதற்குக் காரணமாயிருந்தது அரக்கர் பகைகொண் டியற்றிய கொடுமையே. ஆயினும், அதனை அறைதற்கு, ஐம்பெரும் பத்தினிப்பெண்டிரில் ஒருத்தியாய மண்டோதரி கற்றிலள்; கற்றிருப்பினும் இதனை இங்கு எடுத்தியம்ப நினைத்திலள். அத்தகைய கற்பற மொன்று மிங்குக் கருதவேண்டாக் கம்பர், புரந்தரனார் பெருந்தவத்திற்கும் பின்சென்று, "அரக்கர் எங்கள்மேல் விண்டனர், விலக்குதி' என்ன மேலைநாள் அமரர் பெற்றிருந்தவாக்கினை, சூர்ப்பணகை இராமனைக் காணப்புகுவதோடும் தொடர்புபடுத்துவா ராயினர். இனி, இன்னும் பின்சென்று அவ் வரக்கர்தாம் ஏன் தீவினை செய்தனர் எனக்காரணம் வினவத் தலைப்படுவோமாயின், மானுடமனம் இதனிற்கு முடிவுகாணல் இயலாது. "நிலையில்லாத் தீவினையும் நீ தந்ததன்றே" என்று இறைவனை அறியாமல் அதிசயித்தா னென்றக்கால் யாரே தெரித்துரைக்கும் ஆற்றல் பெற்றுளார்.

# வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்

[232-வது பக்கத் தொடர்ச்சி]

சூதுபோர்ச் சருக்கம்

மூத்த தாதைதன் னோலையு
மிளையவன் மொழியுமொத் தமைநோக்கி
வார்த்தை வேறுமற் றொன்றையு
முரைத்திலன் மனுநெறி வழுவாதோன்
சேத்த நாகவெங் கொடியவன்
கொடியவன் சிந்தையி னிலைதோன்றக்
கோத்த கோவைநன் றாயினுந்
தகுவதோ குருகுலந் தனக்கென்றான்.

[பெரியப்பனால் எழுதி அனுப்பப்பட்ட ஓலையும், சிற்றப்பன் சொன்ன வார்த்தைகளும் ஒத்திருக்கக்கண்டு, வேறு வார்த்தையொன்றையும் மனுமுறைதவறாத தருமன்சொல்லானாய், (கண்கள்) சிவந்த கொடுமையான நாகத்தின்கொடியையுடைய துரியோதனன், தனது கொடிய வன்மையான (உரங்கொண்ட) நெஞ்சினுடைய நிலைமை தோன்றத்தொடுத்த சூழ்ச்சித்தொகுதிகள் அவனுக்குஏற்றவைகளேயாயினும், குருகுலத்திற்குத் தகுந்தவையோ என்றான்]

அயலா ரறியாவண்ணம், கெடுமதியுடைய ஒருவன் செய்யும் சூழ்ச்சிகளை, அச்சூழ்ச்சிகள் தன்னைத்தீண்டு முன்னர் மற்றவன் கண்டுகொள்வானாயின், இவனுக்குண்டாகும் சினத்திற்கும் இவன் வாய்நின்று பொங்கும் மொழிகளுக்கும் அளவிருப்பதில்லை. அவனையும் அவனைத் தொடர்ந்தாரையும், அவனுக்குமுன்சென்ற மூதாதையரையும், பின்தோன்றும் கான்முளைகளையும், சேர்த்தும் தனித்தும் வசைமொழிகளுக் கிலக்காக்கியபின்னு மவை பயனற்றுப்போகுமோ வென வஞ்சி, தெய்வத்தை விளித்து மானுடனுக்கும் அக்கடவுளுக்கு மொன்றாய்ப் பல எச்சரிக்கைகள் செய்வது பெரும்பாலோர் வழக்கம். ஆயினும் யுதிட்டிரனோ அப்பெரும் பாலோருக்கு விலக்கானவனாதலால் அவ்வண்ணமொன்று முரைத்திலன். இயற்கையிற் பொறுமையும் தான் கற்றகல்வியி னங்குசத்தா லடக்கப்பட்ட மனமும் பொறிகளுமுடையவனாதலால், தருமராசன் மெய்ம்மறந்த மொழிகளொன்றும் புகன்றிலன். உயர்குடிப் பிறந்தோர் சினங்காத்துக்கொள்ளும் குணமே என்றும் சிறந்தகுணமென்று கருதினவரானபடியால், தம்மிடம் எழுந்த சீற்றம் தக்கதேயாயினும் அதனையடக்கியாட்கொள்வதே அவருக் கேற்றநடை. இதனை வழக்கத்தில் ஆங்கிலேயர் தம்முடைய குடும்பகாரியங்களில் நாடோறும் கையாண்டுவந்து, நற்குணங்களில் ஒன்றாய் வழிவழித் தம் மக்களுக்குப் புகட்டி வருகின்றார்.

தாதை மூத்தவனும் விதுரன் இளையவனுமாயிருந்தும், முன்னவன் முதிர்ந்த ஞானமற்றவனாயும், பின்னவன் அதனைப் பெரிது பெற்றவனாயும் இருவரும் அறிவுமுறைபிறழ்ந்த டைந்திருந்தார்கள். வார்த்தை வேறொன்றும் புகலவில்லையெனவே அச் சந்தர்ப்பத்திற்குரியதும், அம்மக்களுக் கேற்றதுமான வார்த்தைகளைப் புகலவில்லை. அங்ஙனம் புகன்றிருப்பானாயின் தன்னுடைய மூத்த தந்தையைப் பழித்தவன் ஆவன். அக்காலை அவனை மனுநெறி வழுவாதோன் என்று புகலுத லியலாது. சாந்தமூர்த்தியாகிய தருமன் வேறென்ன சொன்னான் என்னில், இவர்கள் செய்கின்ற இச்செய்கை குலத்திற்கேற்றதோ, என்றான். நமது நாட்டில் பல நூற்றாண்டுகளாகக் குடும்பத்தின் உயர்வே பெரிதும் எண்ணப்பட்டு வருகிறது. குடும்பத்தில் பெரியோனொருவனுக்கு அரசனுக்குரிய அதிகாரம் கொடுக்கப்பட்டும், மற்றவர்கள் அவனது ஆட்சிக்கடங்கினவராயும் இருந்து வாழ்ந்துவந்தனர். சரித்திரகாரர் இதனைத் தலைவனுக்குரிய அதிகாரம் என்று சொல்வர். அக்காலத்தில் அனைவரும் ஒன்றுசேர்ந்து வசித்துவந்ததாலும், தனிப்பட்ட தலைவன் தலைவியருட்பட்ட குடும்பங்கள் ஏற்படாததாலும், குடிமக்களாயினோர் குடும்பங்களையே, கிராமத் தொடக்கமாகவும் நகரத்தின் அடிவாரமாகவும் எண்ணி வந்தார்கள். ஆகவே ஒருவனுக்கு வந்த நன்மையும் தீமையும் அவனதுகுடும்பத்தின்மே லேற்றிச் சொல்லப்பட்டுவந்தது. குடும்பக் கோடரி என்றும் குலத்தைக் கெடுக்க வந்தவன் என்றும், இது எங்கள் குலத்திற் கடுக்காது என்றும் பழமொழிகளும் சொற்றொடர்களும் அதன்காரணமாகவே ஏற்பட்டன. ஆனதுகொண்டு கம்பரும் வாலி இராமரைப் பழித்ததாய்க் கூறுமிடத்திலும்,

வாய்மையும் மரபுங்காத்து மன்னுயிர்துறந்த வள்ளலாய தசரதன் குடும்பத்தில் பிறந்த பிள்ளையோ நீ,
குலத்திற்கு நாயகம் உன்னதன்றோ,
கோவியற்றருமமுங்களகுலத்துதித்தோர் கட்கெல்லாம்
ஓவியத்தெழுத வொண்ணாவுருத்தாயுடைமையன்றோ

என்று ஏசிப்பேசினதாய் எழுதியுள்ளார்.

ஆகவே முதன்முதலில் தனக்கு வரும் கெடுதியை எண்ணாது தருமர் வழக்கம்போல் தனது குலத்தின் இழுக்கைக் குறித்தே பெரிதும் ஏங்குகிறார். அமைதி குடிகொண்ட அவருக்கு, கொடிய வன்சிந்தையுடைய துரியோதனன் என்று கூறிவிட்டதே பெரும் பழிப்புக்கிடமாயிற்று. அவன் சிந்தைக்கேற்ப அவன் கொடியும் அமைந்திருந்தது என்றால் துரியோதனனுக்கும் நாகத்திற்குமுள்ள ஒற்றுமை விளங்கிற்று. தனக்குத் தீம்பாலூட்டுகின்றவனுக்கே கேட்டை விளைவிப்பது பாம்பினது தன்மை; தன்னொடு பழகிய தன்னுடன் பிறந்தாருக்கும், மற்றுமுள்ள நல்லோர்க்கும் பொல்லாங்கிழைப்பது துரியோதனன் இயற்கை. கோத்த கோவை, செய்த சூழ்ச்சியின் தொடர்பு. மந்திரக்கிழவர் சூழ நீண்டதோர் ஆலோசனை செய்து, படிப்படி இவ்விது விளையின் இன்னின்னவாறு செய்யவேண்டுமென்று முன்னரே குறிப்பிட்டுக்கொண்டதைக் கோவை உணர்த்திற்று. வார்த்தையொன்று முரைத்திலன் என்று கூறியபின்பு அச்செய்யுளிலேயே அவன்வேறு மொழிகளைச் சொன்னதாய்க் கூறினது சிறப்புடைத்தன்று. வார்த்தையொன்றும் அவன் புகன்றிலன்; ஆயினும் அவனிடை நிகழ்ந்த மெய்ந்நிகழ்ச்சிகள் இவை என்று அறைந்திருப்பின் உயர்ந்ததாயிருக்கும். அநுமன் இலங்கைக்குச் சென்று சீதையிடம் கணையாழி காட்டியபோது சீதையும் அதை வாங்கித் தன்மார்பில் வைத்தணைத்து, ஒளிர்கின்ற கண்ணீரைத் துடைத்தும், நிற்காமல் மீண்டும் மீண்டும் நிறைகின்ற அந்நீரொடு நிறைந்த அக் கண்ணிணைகளால் அநுமனைப் பரிவுடன் நெடிதுநோக்கியும், சொல்லவெண்ணும் வார்த்தையொன்றும் சொல்லாதவளாய்த் துயரே மேலிடவும் அது தகாதென அடக்கி விம்மியழாது துக்கத்தையும், வார்த்தையையும், மேலெழும் விம்மலையும், அடக்கி விழுங்கிய இறும்பூதைக் குறிக்கும், விழுமிய பொருள்தந்து விகசித மோங்கி,

மோக்குமுலை வைத்துற முயங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்பநெடு நீள
நோக்குறுவ லக்கருதி மொன்றுறுவல் இல்லாள்
மேக்குகிமிர் விம்மலள் விழுங்கலுறு கின்றாள்

எனவரும் கம்பர்செய்யுளை இனிது நோக்குக.



# இளமையும் முதுமையும்

வீணுட்படாதொருவன், வயதில் இளையோன் எனினும் காலத்தால் முதியோன். ஆனால் அது மிக அருமை. பொதுவாக, இளமை, முதற்சிந்தனையொத்தது. அடுத்துப் பிறக்கும் சிந்தனையைப்போல் அவ்வளவு அறிவு நிறைந்ததன்று. வாழ்க்கையில் இளமையுளது போல் சிந்தனையிலும் இளமையுண்டு. இளமையின் மனத்தில் கற்பனைசக்தி ஊற்றுப்பெருக்காய் நிற்கின்றது. தெய்வத்தன்மையுமுளது. அடங்காச் சினமும், கொடுவிச்சையும், கலக்கமும் கொண்ட இயற்கைக்குணம், ஆயுளின் நண்பகல் கடந்தாலன்றி வினைநடாத்தற்குரிய முதிர்ச்சியுடையதன்று. அவ்வாறாயதன்மையைச் சிலவேந்தர்பாலும் காணலாம். அன்னார் இளமை பிழைபொதிந் திருப்பதோடு நில்லாது, நெறிபிறழ்ந்த செயலுமுடைத்து. செறிவுடைமை இளமையில் நன்று. முதுமையில் மடியின்மை வினையியற்றுங் கருவி. இளைஞர்கள் வினைத் தூய்மையைக் காண்பதிலும், புதுவினை தோற்றுவிப்பதில் வல்லுநர்; நெறிவழித்துய்ப்பதைவிட, வினைத்திட்பத்துழி நிற்றலில் தேர்ச்சியுடையார்; கண்ட வினையைக்காட்டிலும் காணுறு வினைக்குரியர். முதுமையின்மதிவலி, தான்பழகிய பொருளுக்கு வழிகாட்டி; புதிய பொருளிடத்து மாசுடைத்து. இளைஞரின் தவறு வினையினழிவு; முதியோர்தவறு வினையின் விரைவிலும் நிறைவிலும் குறைவுடைத்து.

இளையோர் தம் திறமைக்கு மேற்பட்ட வினைகளையாற்ற விழைகின்றார்; வினையை, முடிப்பதைவிடப் பெருக்குவதில் நிற்பர்; துறையையும் அளவையும் நோக்காமல், வினையின் முடிவையே நோக்கி விரைவர்; இடைப்பட்ட சில நீதிகளை வழிபிறழ்ந்து பற்றுவார்; நினையாத இடையூறுகள் வருமென்பதை யறியாது, மாற்றிமாற்றி யமைக்க முந்துறுவார்; முதலில், மிகையான பரிகாரத்தை நாடுவர்; நிற்கவோ திரும்பவோ செய்யப் பழகாப் பரிபோன்று பிழையைப் பெருக்குவனவற்றை ஒத்துக்கொள்ளவும் செய்யார், நீக்கவுஞ் செய்யார். முதியோரோ, எவற்றிலும் பெரிய ஐயமுறுகின்றார்; நீண்டநேரம் ஆராய்கின்றார்; வினைசெயல் வழிச் சிறிதே செல்கின்றார்; தம்பிழை நோக்கி அழிகின்றார்; வினைமுடிவை நாடிலர்; நிறைந்த வெற்றியை விரும்பிலர்; சிறு வெற்றியே போதும்.

ஆனதுபற்றி, வினையாற்றுவதற்கு இருதிறத்தாரையுங் கொளல்நன்று; ஏனெனின், அம்முறை நிகழ்காலத்திற்குரிய நன்மையைப் பயக்கும்; ஒவ்வொரு வகையினரும் மற்றவகையினரின் குறையை யொழிப்பர். இளையோர் கற்பவராயும், முதியோர் வினையாளராயும் இருப்பாராதலின் வருங்காலத்திற்கு நன்று. புறத்தார்க்கும் அது நன்று. ஏனெனில், அதிகாரம் முதியோர்பால் நிற்க, இன்னா செய்யாமையும் வெருவந்த செய்யாமையும் இளையோர்பால் அமையும். பெரியார் ஒருவர் "இளைஞர் காண்பர், முதியோர் கனவு கொள்வார்" என்ற மொழியிலிருந்து, முதியோரைக் காட்டிலும் இளைஞரே, இறைவன் அண்மையி லுளர்என்று கூறினார். ஏனெனின், காட்சிதான் கனவைவிட உண்மையுரைக்கும். உறுதியாகக் கூறுங்கால், புவிப்பற்று ஏற ஏற, புத்தி மயக்குறும்.

முதுமையின் விருத்தி அறிதற்றன்மையிலும்மனத்திட்பத்திலும் உணர்ச்சியிலு மன்று. இளமையிலும் முதுமைசிலர்பாலுண்டு; ஆனால் விரைவில் வாடுகிறது. அவரறிவு நுணுக்கநுண்ணறிவு; அதனின் கூர்மை விரைவில் மழுங்குகின்றது; இரண்டாம் வகையினர் இயற்கையிலேயே நற்குணம் பெற்றவர்; ஆனால் அது முதுமையைவிட இளமைக்கு ஏற்ற அணியாய் நிற்கிறது; உவமையாக, கடன்மடை திறந்தன்ன சொற்பொழிவு இளமைக்கே யெழிலன்றி முதுமைக்கன்று; மூன்றாம் வகையினர், தொடக்கத்தில் அளவிலாப் பெருமுயற்சியின்பாற் படுகின்றனர். அதன் வழி, வயதினளவுக்கு மேற்பட்ட மாண்பைக் காட்டுகின்றது. இது 'ஆதிக் கேற்ற இறுதியிலது' என்ற மொழிக்கு இலக்கு.

7-வது வருடம்! 7-வது வருடம்!!

## அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.
எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்
நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்திபோதனையே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை; நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்




குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

ஸோல் ஏஜண்ட்: கன்வஸர்ன், மதுரை.

நஞ்சன்கூடு பல்பொடி
காஞ்சீபுரம்

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

*தலையங்கங்கள்:*— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இனைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

*தலையங்கம்:*— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணைக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

## மதிப்புரை

...ந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ்மகள்.
...யவர், "ரத்நம்". கிடைக்குமிடம்:—
...நூவல் பப்ளிஷிங் கம்பனி, கண்டனூர், இராம...
... அணா 4. [நாகபுரம் ஜில்லா.

...பங்காளிகள் பொய்வழக்கால் செல்வமெலாங் கவர் ...கொள்ளப் பிணியும் பசியும் வருத்திய அன்னையு... ஏழ்மைகூர்ந்து நலிந்திருந்த சந்திரமதி என்னும் ...மி, தனக்கொருகால் உதவிசெய்து மறைந்துநின்ற ...வனைக் காதலித்த மனத்தளாய் இருந்தாளாகப் பிற... இழந்திருந்த பெருஞ்செல்வத்தைப் "பிரிவீகௌ...ஸில்" அப்பீலில் வென்றதீர்ப்பினால் மீண்டும் பெற்...ச் செல்வவதியாய் வாழும்நாள், அக்காதலன் வந்து ...ன்ற, கண்டவளவில் அவனைக் கட்டித்தழுவி, மண...ச்சடங்குகள் எதற்கும் காத்திராமல், பள்ளி...டந்து இன்புற்றாளென்பதைக் கொண்டாடி எழு...ய இச்சிறு நாவலைக் கண்ணுற்றோம். தமிழ் மக்...ன் முன்னேற்ற முயற்சிகளில் ஒன்றாகப் பெரிது ...க்காலம் நடமாடிவரும் இயற்கைப்புணர்ச்சியின் ...பவத்தை இதன் ஆசிரியர் பின்வருமாறு, களிப்பு...ந்த தம் உள்ளம் குதிகொளப் பாராட்டுகின்றார்:—

"காதல்-இல்லையெனில் சாதல். இதுவே ஜீவசிருஷ்டி...யின் இலக்கணம். இதுவே உலகின் விரிவுமுறை. மற்...றைய மொழியினரைவிடத் தமிழ்நூலுடையார் ஒருவரே ...காதலின் கனவைக் கண்டவர்—கோவையாகச் சித்திரித்...தவர். அகப்பொருளாக மிகப்பொருள்பட அமைத்தவர். அந்தக் காதல் கைவரப்பெற்ற இந்தத் தமிழ்நாட்டில், கா...லக்கொடுமையால், கடிமணம் கடியப்படும் மணமாகவே ...ஆய்விட்டது. இந்தச் சுதந்தர விழா-கண்ணினை நோக்கிக் ...கலந்த இந்தக் கனிவுடைக் காதல்மணம்—துக்கத்தைத் ...துடைத்துச் சுகத்தைக்கொடுக்க இயற்கையாய் அமைந்த ...இவ் வன்பின் பிணைப்பு—தமிழ்நாட்டுத் தனிப்பயனாய் ...விளைந்த இப்புணர்ச்சியின் உணர்ச்சி ஒப்பந்தமாக மாற்...றப்பட்டு, சட்டதிட்டங்களுக் குட்படுத்தப்பட்டு, ஆக்கி...னைக்கும் தண்டனைக்கும் ஆளாக்கப்பட்டது. என்னே புரட்...டு! இயற்கைக்குமாறாக மனிதன் அகங்கரித்துச் செய்யுஞ் ...செயற்கைகளெல்லாம் நிந்திக்கப்படத் தக்கவைகளாகவும், ...புறக்கணிக்கப்படத் தக்கவைகளாகவுமே ஆய்விடுகின்...றன. செயற்கைமணங்களில் 100-க்கு 99பாகங்கள் இன்...பத்திற்கு மாறாகத் துன்பமாகவே மாறிவிடுகின்றன. ...சுதந்தரமற்ற வாழ்வினின்றும் சுதந்தர மின்மையே தோ...ன்றுகின்றது, சுதந்தரம் பூத்தொளிரும் உண்மையான ...சுயராஜ்யம் வேண்டப்படின்—சுதந்திரமக்களினாலன்றோ ...இவ்வுலகம் நிர்மாணிக்கப்படவேண்டும். காலமும் அந்த ...லட்சியத்திற்கே மாறுகின்றது. சிந்தனையின் மத்தியி...லும் எதிர்ப்பின் முன்னணியிலும் உலகம் முன்னுக்கே ...சென்றுகொண்டிருக்கின்றது. சமூகத்தைப் பீடித்த தரு...க்களும் உதிர்ந்துகொண் டிருக்கின்றன. பழங்காலத்து ...உடைகள் பார்வைக்காகப் பாதுகாக்கப்படுதல்போலப்பல ...சமூகக்கட்டளைகள் பழுதுபார்க்கப்படுகின்றன."

...சுதந்தரத்தைப் பற்றி இவ்வகைக் கருத்துக் கொண்...டவர் இவ்வாசிரியர் ஒருவரே யல்லர். ஆயினும் ...றும் இவரனைய பிறரும் விடயங்களின் உண்மைத் ...தன்மையை எத்துணைஞ் சிந்தித்து ஆராயவல்ல பயிற்சி...யுடையவர்களென்பதை இவர் நூலில் பின்வரும்வாக்...கியங்கள் தெரியக் காட்டிநிற்கின்றன:—

"...மனிதன்—ஆணவத்தின் உருவம்—இந்தச் சிருஷ்டி...யிலே இயற்கைவிதிக்கு மாறாக நடப்பது. சுகந்தரும் ...பொருள்களாகிய மண், பெண், பொன் இம்மூன்றையுந் ...தனதுடையதாக அடக்கியாள விரும்புகின்றான். இதனா...லே, பொய், கள், களவு, காமம், கொலை என்னும் ...ஐம்பெரும் பாதகங்கள் உலகத்தில் நடைபெற இடங்கொடுக்...கிறது. இந்த இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான...[illegible] ...யினர் அனைவரும், அடிமையானது அழிக்கப்பட...[illegible]

## வர்த்தமானம்

பிச்சையெடுத்தும் பக்திசெய்தவள் :— மன்னார்குடியில் ஓர் பிராமணப்பெண் பிச்சையெடுத்துச் சேர்த்த ரூ. 7000 கொண்டு, அவ்வூர் இராஜகோபால சுவாமிக்கு நவரத்தினப் பாதுகை செய்து பூட்டினாள் எனத் தெரிகின்றது.

***

மனைவி விற்பனை:—பின்வரும் செய்தி "லோகோபகாரி"யில் தென்படுகிறது. ஈஸ்ட் ஆரஞ்ச்நியூஜெர்ஸியிலுள்ள மிஸ்டர் பிரெட் சு மர்க்கான் என்பவர் தம்முடைய ஐந்து அடி உயரமும் நூற்றெழுபது பவுண்டு நிறையமுள்ள மனைவியையும் இரண்டு வயதுள்ள ஓர் புத்திரனையும், ஐந்து வருடம் நாலுமாதம் பிராயமான இரு புத்திரிகளையும் விற்பதாகப் பத்திரிகைக்கு ஓர் விளம்பரம் கொடுத்திருக்கிறார்.

அதற்கு அவர் தெரிவித்திருக்கும் காரணம் யாதென்றால்—தற்கால வியாபார பந்தத்தால் தம்மிடம் பொருளில்லாமல் கஷ்டப்படுகிறாராம். தம் நிர்பந்த நிலைமையைத் தம்நண்பர்களிடம் கூறியும் உதவி கிடைக்கவில்லையாம். ஆகையால் அவர்கள் பட்டினிப் பிணியால் கஷ்ட மனுவிப்பதைப் பார்க்கிலும் அவர்களை விற்றுவிடல் நலமென்று கருதுகிறார். தற்காலம் மானிடர்களுக்கு அதிக விலைமதிப்பில்லை யென்று தாம் நன்கு அறிந்திருந்தாலும் தம் மக்களும் மனைவியும் அழகுள்ளவர்களென்றும் அவர்கள் தனித்தனியே பெறுமதிப்பு நாற்பது பவுன் என்றும் அவர்களைப் பண்டமாற்றுச்சாலைக்குக் கொண்டுபோய் விற்கலாம் என்றும் அவ் விளம்பரத்தில் தெரிவித்திருக்கிறார்.

***

தற்கொலை முயற்சி:—ஒரு முஸ்லிம் உபாத்தியாயரது குமாரன் திப்ருகார் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலில 8-வது வகுப்பில் படித்து வந்தான். அவன் பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டிக்கு அப்பீல் செய்தும் மேல்வகுப்புக்கு அனுப்பப்படாததனால் அச்சிறுவன் தனது சட்டையைக்கழற்றி அருகில் புத்தகங்களுடன் மறைத்து வைத்துவிட்டுத் திப்ருகார் நகர ஸ்டேஷனை நோக்கிச் சாயந்திரம் 10-வது நெம்பர் வண்டி வந்துகொண்டிருக்கையில் தண்டவாளத்தின்மேல் கழுத்தை வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டதாகவும், டிரைவர் இதைத் தூரத்திலிருந்து பார்த்ததனால் சில அடி தூரத்தில் என்ஜினை நிறுத்தி, இப் பையன் எழுந்து ஓடுமுன்பு அவனைப் பிடித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அவன் கைதுசெய்யப்பட்டுச் சோதித்ததில்வருடாந்தரப் பரீட்சையில் அவன் பல பரீட்சைகளிலும் மிகக் குறைவாக மார்க்கு வாங்கியிருப்பதைக் காட்டும் "பிராகிரஸ் ரிப்போர்ட்" கிடைத்ததாகவும் தெரிகிறது. ஒரு வங்காள வாலிபன் இதே வண்டிமுன்பு படுத்து ஒரு மாதத்திற்கு முன்பு தற்கொலை செய்துகொண்டான். அப்பொழுது இதே டிரைவர் என்ஜினை ஓட்டி வந்தார்.

"சுதேசமித்திரன்"

---

டாலன்றிக் கொடுமையானது குறையாது என்றமுடிவுக்கு வந்துவிட்டனர். இதனால் எழுந்த சுதந்தர தாகம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடங்காது எழுந்துவிட்டது. சக்தியற்றவர்கள் என்று சமூகத்திலிருந்துஒதுக்கப்பட்ட பெண்மக்கள், ஆண்களோடு போட்டிபோட்டு எல்லாத் துறைகளிலும் முன் ஏறிக்கொண்டிருக்கின்றனர். மூலைகளில், முக்காடுகளுக்குள் மறைக்கப்பட்டிருந்த பெண்கள் வெளியில் ஆறுதலோடு உலாவுகின்றனர்."

வாழ்க்கையின் வழிகாட்டவரும் இவ்வாக்கியங்கள் [illegible]திற்கு எத்துணை இணங்கித் தொடர்கின்றன [illegible] தெளிய வல்லவர்க்கும், வல்லவரல்லாதார்க்கு[illegible] வேறு சில விளம்பல் மிகை.

188961

KALANILAYAM.
REG NO. M, 2324.


—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

“ஜீவாமிருதம்”



பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதராஸ்.

கேடலாக் இலவசம்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்க நூல் உரையுடனும், கிரேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைவெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணா அதிகம். தபாலில் அனுப்பவேண்டியானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

:: பாகவத வினா விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ண லீலை, லீலா சுகர் கதை போன்ற பல முக்கியமான விடயங்களின் மெய்க்கருத்தை விளக்கும் அநுபந்தங்களும் அடக்கியுளது. விலை ரூ. 2

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

## — திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணவர்க்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

[ஏற்படுத்தியது] நாஷனல் [1906

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாத லைப் இன்ஷூரன்ஸ் ஸ்திரதர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷணை குடும்பச் சேமிப்பு
இவைகளுக்கு இன்ஷூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரீமியங்கள்—தாராள நிபந்தனைகள்
இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஜேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்.

## :: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)